

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


வைகாசி - ஆனி
ஜூன் - 2020

மலர் 9 இதழ் 6


## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் <br> பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 6 |
| நீதிக் கதைகள் <br> பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 9 |
| அனுக்கிரஹ பாஷணம் <br> பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 12 |
| தமிழ் பாகவதம் | 15 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 17 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 25 | 20 |
| காளிதாஸரின் ஸ்தோத்ரங்கள் | 22 |
| வாழ்வின் நான்கு நிலைகள் | 24 |
| நான் சொல்வதின் நோக்கம் | 26 |
| நவீன சமுதாயத்தின் குறைபாடுகளும் தீர்வும் | 28 |
| புராணக்கதை | 33 |
| மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம் | 35 |
| ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி | 36 |
| வேதாந்த ஸாரம் | 38 |
| மகாபாரத சுருக்கம் | 40 |
| அத்வைத வினா - விடை | 43 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 45 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com



சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## பாரத நாடு இப்பார்க்கெல்லாம் திலகம்

வாசகர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள கதைகளைப் படிக்கவும். தலையங்கத்தின் தொடர்பு விளக்கப்படும். முன்பொரு காலத்தில் நம் நாட்டில் ரந்திதேவன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். வழக்கம் போலவே நீதி தவறாமல் குடிகளைக் காத்து வந்தான். வேள்விகள் பல செய்து கஜானாவையே காலி செய்து விட்டான். தன் உடமைகளையும் தானம் செய்து விட்டான். நாட்டில் பஞ்சம் தலை விரித்தாட தன் குடும்பத்திற்கு கூழுக்குக் கூட வழியில்லாததாக ஆகிவிட்டது. மக்கள் இது கண்டு கொஞ்சம் கோதுமைக் கஞ்சியும் தண்ணீரும் அனுப்பி வைத்தார்கள். மிக்க மகிழ்ச்சியுடன் அதை சாப்பிடப் போன போது ஒரு யாசகன் வந்து பசியென்றான்.

சீ என்று சொல்லாமல் அவனுக்கு கொஞ்சம் கஞ்சியைத் தந்து மீதியை அரசனும் அவன் குடும்பமும் உண்ண இருந்தபோது இன்னொரு யாசகன் வர அவனுக்கும் ஒரு பங்கைத் தந்தான். மீதி உணவை சாப்பிட அமர்ந்தபோது சாமீ'' என்னும் குரல் அவன் காதில் விழ ஒரு புலையன் நான்கு நாய்களுடன் நிற்பதைக் கண்டான். கையில் இருப்பதோ நீர்மட்டும்தான். அதையும் மனமுவந்து அந்த புலையனுக்கு தந்தான். அப்போது இரண்டு ஸ்லோகங்கள் அவன் சொன்னான். அவனுடைய த்யாக புத்தியைப் பார்த்து நாராயணர் அவனுக்கு முக்தியை அளித்தார். ***(ஸ்ரீமத் பாகவதம்)***

தர்மர் யுத்தம் முடிந்தபின் அஸ்வமேத யாகம் செய்து அதன் முடிவில் நிறைய தானங்கள் செய்தார். இதுமாதிரி தானங்கள் யாரும் செய்யவில்லை என்று சொல்லும் அளவுக்குச் செய்தார். நிறையபேர் அவரை துதி செய்ய இருந்தபோது ஒரு கீரிப்பிள்ளை அங்கு வந்தது. அதன் உடலில் பாதி தங்கமாயிருந்தது. இதுவென்ன தானம், குருக்ஷேத்ரத்தில் உஞ்ச விருத்தி ப்ராம்மணன் செய்ததற்கு ஈடாகுமா என்றது. ''நீ யார் என்ன நடந்தது? என்று கேட்க அது சொல்லிற்று.

அந்த ப்ரதேசத்தில் கொடிய பஞ்சம். அப்போதுகூட அந்த ப்ராம்மணர் வீட்டில் அதிதி ஸத்காரத்துக்கு சளைக்கவில்லை. தமக்குக் கிடைத்த பொரிமாவை அவர்கள் சாப்பிட உட்கார்ந்த சமயம் பவதி பிக்ஷாம் தேஹி என்னும் குரல் ஒலித்தது. வந்த அதிதியை உட்கார வைத்து இருக்கும் மாவை அவர் பங்கைக் கொடுத்தார். வந்தவரோ பசி என்றார்.

ப்ராம்மணரின் மனைவி தன் பங்கைக் கொடுக்க மீண்டும் அவர் பசி என்றார். புத்ரன் மாட்டுப் பெண் இவர்களும் தங்கள் பங்கைக் கொடுத்தனர். அவர்களுக்கு ஒன்றுமில்லாது போய்விட்டது. அதிதியும் மறைந்தார். நான் தர்மதேவதை. நான் வைத்த பரீக்ஷையில் ஜயம் கண்டுவிட்டீர்கள். உங்களின் இந்த த்யாகச் செயல் உங்கள் அனைவருக்கும் ஸ்வர்கத்தில் இடம் ஏற்படுத்தியுள்ளது என்று கூறி மறைந்தார். நான் அப்போது அங்கிருந்தேன். அவர்கள் சிந்திய மாவில் புரண்டேன். என் உடம்பு பாதி தங்கமாய்விட்டது. பரம உத்க்ருஷ்டமாக ஏதெனும் தானம் நடந்தால் மீதி பாதியும் தங்கமாய் விடுமே என்று இங்கு வந்தேன்'' என்றது.

(மகாபாரதம்)

மேற்கூறிய இரண்டு கதைகளிலும் தன் கஷ்டத்தையும் பாராமல் அவர்கள் செய்த த்யாகம் பெரியெதென்று சொல்லப்பட்டது.

**செய்திகள்:**

பாரதம் கரோனா வைரஸ் கிருமி அழிவுக்குத் தேவையான HCQ மருந்தை அமெரிக்காவுக்கு அனுப்பவேண்டும் (டொனல்ட் ட்ரம்ப்).

ராமாயணத்தில் அனுமன் சஞ்சீவினி மலையை கொண்டு வந்து லக்ஷ்மணனை எழுப்பியது எப்படியோ அது போன்றே HCQ மருந்துகளை ப்ரேசில் நாட்டுக்குத் தந்து உதவ வேண்டும். ப்ரேசில் அதிபர் HCQ மருந்துகள் எம்மிடம் இல்லை. எனவே இதை அதிக அளவில் தயாரிக்கும் இந்தியா எங்களுக்குத் தந்து உதவ வேண்டும். இது போலவே (இலங்கை, மாலத்தீவு, நேபால், மலேசியா அதிபர்கள்). இந்தியா கஷ்ட தசையில் இருப்பினும் எங்கள் நாட்டிற்குத் தேவையான HCQ மருந்துகளை உடனடியாக அனுப்பி வைத்ததற்கு நன்றி கூறுகிறோம். இப்போது இருக்கும் காலக் கட்டத்தில் இந்தியா மருந்துகளை பல நாடுகளுக்கு அனுப்பி மிகச்சிறந்த சேவை செய்துள்ளது. அதற்கு ஐ.நா.சபை பாராட்டுகளைத் தெரிவிக்கிறது. (ஐ.நா.சபை அதிபர்).

அன்பார்ந்த வாசகர்களே மேற்கூறிய செய்திகளையயும் முதலில் எழுதப்பட்ட கதைகளையும் இணைத்துப் பார்க்கவும். கரோனா விஷஅணு வர்ஜயவர்ஜ்யமில்லாமல் ஏழை, பணக்காரன் வேறுபாடு இல்லாமல் வல்லரசு, வளர்ந்த நாடு என்றெல்லாம் பார்க்காமல் மிகப்பெரிய த்வம்ஸத்தை செய்து வருகின்றது. நம் நாடும் இதற்கு விதி விலக்கல்ல. அப்படியிருப்பினும், நாம் இன்னல் அனுபவித்தாலும் நாம் தயாரிக்கும்

HCQ மருந்துகளை பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு அனுப்பி வைத்தோம். மோடி தலைமையில் அமைந்துள்ள மத்ய அரசின் மனிதாபிமானத்தை மனம் திறந்து பாராட்டுவோம். ஆச்சர்யம் ஒன்றுமில்லை. ரந்திதேவனும், உஞ்சவிருத்தி ப்ராம்மணனும் நம் பாரம்பர்யத்தில் ஊறி இருக்கிறார்கள். அதனால்தான் இது சாத்யமாயிற்று. ''நமக்கு எவ்வளவோ குடும்ப பிரச்சனை, பணம், உடை, உணவு இவற்றிற்காகப் படும் அவஸ்தை எத்தனையோ இருக்கலாம். லாபக் கணக்குப் பார்க்கக் கூடாது. பிறர் துன்பத்தைப் போக்க நம்மால் ஆன உதவியைச் செய்ய வேண்டும். அவர்கள் பயன் பெறுவது ஒருபுறம் இருக்கட்டும் நமக்கு ஆத்மத்ருப்தியும் மன நிம்மதியும் கிட்டும்'' என்று பெரியவா சொன்னதிற்கிணங்கவும் ''காலத்தினால் செய்யும் உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது''எனும் வள்ளுவப் பெருமானின் வாக்குக்கிணங்கவும் பெரிய சேவையை மத்ய அரசு செய்துள்ளது.

''பாரத நாடு பார்க்கெலாம் திலகம்'' எனும் பாரதியின் வரியை உண்மையாக்கிவிட்டது என்று கூறி இவ்விதழை ஸ்ரீசரணர்கள் பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்.

## *ரிக் வேதத்தில் கூறப்பட்டுள்ள சில நல்ல கருத்துக்கள்*

**ருக்,-8-59-5**

*1. நம்முடைய மேன்மைக்காகவே நாம் உண்மை பேசுகிறோம்.*

**ருக்-9-74,3**

*2. இந்த பரந்த உலகில் நேர்மை வழியினை கடைப்பிடிப்போர் சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்.*

**ருக்-4,23,10**

*3. உண்மையைத் தேடுவோர் அதனை கட்டாயம் கண்டு கொள்வர்.*

**ருக்10,61-10**

*4. உண்மையை கடைபிடிப்போர் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் எப்போதும் இனம் கண்டுகொள்வர்.*

**ருக்,9,73,8**

*5. உண்மையைக் காப்பவரையும் நேர்வழி நடப்பவரையும் எவரும் வெற்றிகாண இயலாது.*

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

C ¸ Á øPa \¢u [ PÒ



“சுக்லாம் பரதரம்” ச்லோகத்தை எடுத்துக் கொண்டு அதில் (உயிரெழுத்து ரீதியில்) எத்தனை அக்ஷரம் இருக்கிறது என்று பார்த்தால் 32 அக்ஷரம் கணக்கு வருகிறது.

சு-க்லாம்- ப-ர-த-ரம்-வி-ஷ்ணும்
ச-சி-வர்-ணம்-ச-துர்-பு-ஜம்।
ப்ர-ஸன்-ன-வ-த-னம்-த்யா-யேத்
ஸர்-வ-வி-க்னோ-ப-சா-ந்த-யே।

என்று எட்டெட்டு எழுத்துக் கொண்ட நாலு பாதங்களாகப் பிரிந்திருக்கிறது. “சுக்லாம் பரதரம் விஷ்ணும்” என்பது முதல் பாதம் “சசிவர்ணம் சதுர்புஜம்” இரண்டாம் பாதம். “ப்ரஸன்ன வதனம் த்யாயேத்” என்பது மூன்றாம் பாதம். “ஸர்வ விக்னோபசாந்தயே” என்பது நாலாவது பாதம்.

ஸரி, அப்படியானால் “ஷட்பதீ” என்கிற “ஆறுகால் ஸ்தோத்ர” த்தில் ஒவ்வொரு ச்லோகத்திலும் இப்படி ஆறு அடிகள் இருக்கின்றனவா? இல்லை. ஒவ்வொரு ச்லோகத்திலும் நாலு பாதங்கள்தான் இருக்கின்றன. ஸாதாரணமாக அப்படி இருப்பதுதான் வழக்கம்.

இந்த “ஷட்பதீ” ஸ்தோத்ரத்திலே ஒரு ச்லோகத்தை எடுத்துக் கொண்டால் அதற்குள்ளே வருகிற பாதங்கள் “சுக்லாம்பரதர” த்தில் இருக்கிற மாதிரி ஸமமான அக்ஷரம் கொண்டதாக இல்லை.

“சந்தஸ் சாஸ்த்ரம்” என்பதாகக் கவிதா லக்ஷணம் கூறும் ஸம்ஸ்க்ருத யாப்பிலக்கணத்திலேயே இந்த விதமான அக்ஷரக்கணக்கில் வராத சந்தங்களை (மீட்டர்களை)ப் பற்றியும் இருக்கிறது. மீட்டரில் இரண்டு தினுஸை அது சொல்கிறது.

ஒன்றுதான் ஒரு உயிரெழுத்துக்கு ஒரு அக்ஷரம் என்ற கணக்குப்படி இருக்கும் மீட்டர். இதற்கு ‘‘வ்ருத்தம்’’, என்று பெயர். தமிழில் ‘‘விருத்தம் பாடுவது’’ என்று சொல்வது இதன் தொடர்புடையதாகத்தான் வந்திருக்க வேண்டும். இன்னொன்று ‘‘ஜாதி’’ எனப்படும்.

ஜாதிக்கும், வ்ருத்தத்துக்கும் என்ன வித்யாஸமென்றால், வ்ருத்தத்தில் குறில், நெடில், கூட்டெழுத்து எல்லாவற்றுக்கும் ஒரே ‘‘வால்யூ’’ தான். ‘‘சுக்லாம்’’ என்பதில் ‘‘சு’’ என்பது குறில்; ‘‘க்லாம் நெடில்;’’ அதோடுகூட ‘‘க்லாம்’’ என்பது க், ல், ம் என்ற மூன்று சப்தங்கள் கொண்ட கூட்டெழுத்தாக இருக்கிறது. இப்படியிருந்தாலும், நாம் எந்த அக்ஷரமானாலும் அதற்கு வால்யூ ஒன்று என்று வைத்து, ‘‘சு’’ ஒரு அக்ஷரம். ‘‘க்லாம்’’ உ.ம். ஒரு அக்ஷரம் என்றுதானே கணக்குப் பண்ணினோம்?

‘‘ஜாதி’’யில் ஒரு உயிரெழுத்துக் கொண்ட அக்ஷரம் ஒவ்வொன்றுக்கும் ஒரே மதிப்பு (value) கொடுப்பதில்லை. ‘‘வால்யூ’’ என்றும் ‘‘மதிப்பு’’ என்றும் சொல்வதற்கு ‘‘மாத்ரா’’ என்று பெயர். மாத்திரை என்று தமிழில் ஆகும். Metre என்பதுகூட. ‘‘மாத்ரா’’விலிருந்து வந்ததுதான். குறில், நெடில், என்று இரண்டு இருக்கின்றன அல்லவா? குட்டையான அ, இ, உ முதலானவை குறில், நெட்டையான அ, ஈ, ஊ முதலானவை நெடில். இவற்றை முறையே ‘‘ஹ்ரஸ்வம்’’ என்றும் ‘‘தீர்க்கம்’’ என்றும் சொல்வது வழக்கம். யாப்பிலக்கணத்திலே குறிலான ஹ்ரஸ்வத்தை ‘‘லகு’’ என்றும், நெடிலான தீர்க்கத்தை ‘‘குரு’’ என்றும் சொல்லியிருக்கிறது. (லகு என்றால் லேசானது; குரு என்றால் கனமானது) ஜாதி எனப்படும் சந்த வகையில் லகுவான அக்ஷரத்துக்கு, அதாவது குறிலுக்கு வால்யூ ஒன்று; குருவான நெடில் அக்ஷரத்துக்கு வால்யூ இரண்டு. இப்படிப் பொதுவாகக் குறிலுக்கு ஒரு மாத்திரை என்றாலும் சில எழுத்துக்களோடு சேர்ந்து ஒரு குறில் வரும்போது, அது இரண்டு மாத்திரையாகிவிடும். அம், கம், சம் என்பது போல ஒரு குறிலுடன் ‘‘அநுஸ்வாரம்’’ என்கிற ‘‘ம்’’ சேரும் போது அந்தக் குறிலுக்கு இரண்டு மாத்திரை ஏற்பட்டுவிடும். ‘‘விஸர்கம்’’ என்பதாக ‘‘ஹ’’ சப்தத்துடன் அநேக சொற்கள் முடியும். ‘‘:’’ என்று இரண்டு புள்ளி போட்டு விஸர்கத்தைக் குறிப்பிடுவார்கள். ‘‘ராம:’’ என்பதை ‘‘ராமஹ’’ என்று சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட விஸர்கம் ஒரு குறிலை அடுத்து வந்தால் அப்போதும் குறிலுக்கு இரண்டு மாத்திரை, உதாராணமாக ‘‘ராம:’’ வில் வரும் ‘‘ம’’ இரட்டை மாத்திரை பெற்றுவிடுகிறது. ஒரு குறிலை அடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட மெய்யெழுத்துக்களின் கூட்டு வந்தாலும் அப்போது குறில் இரண்டு மாத்திரை பெற்றுவிடும். உதாரணமாக, ‘‘விஷ்ணு’’ என்ற வார்த்தையில் ‘‘ஷ்ணு’’ என்பது ‘‘ஷ், ண், உ’’ என்பதாக இரண்டு மெய்யெழுத்துக்களும் ஒரு உயிரெழுத்தும் சேர்ந்த

சப்தம். "வி" என்ற குறிலை அடுத்து இங்கே, ஷ், ண் என்ற இரண்டு மெய்யெழுத்துக்கள் வரும். அந்தக் குறில் இரண்டு மாத்திரை பெற்று வரும்.

அக்ஷரங்களை வைத்து "வ்ருத்தம்" என்ற மீட்டர் முறை இருக்கிறாற்போலவே மாத்திரைகளை இப்படிக் கணக்குப் பண்ணி "ஜாதி" என்ற "மீட்டர்" முறையும் இருக்கிறது. இப்படி "ஜாதி" யில் பல சந்தஸ்கள் (சந்தங்கள்) இருக்கின்றன. ஒரு ச்லோகத்தைப் பாதங்கள் என்ற நான்கு பகுதிகளாக (வ்ருத்தத்தில் போலவே) இதிலும் பிரித்து, ஒவ்வொரு பாதத்துக்கும் இத்தனை மாத்திரைகள் இருக்க வேண்டுமென்று இந்த முறையில் வைத்திருக்கிறது. ஆனால் "ஜாதி" யில் ஒரு சுலோகத்தின் எல்லாப் பாதத்துக்கும் ஸமமான மாத்திரையில்லாமல், ஒவ்வொரு பாதத்துக்கும் வெவ்வேறாக இத்தனையித்தனை மாத்திரை என்று வைத்திருக்கும்.

"சுக்லாம் பரதரம்" ச்லோகத்தில் "சு" வும் ஒரு அக்ஷரம், "க்லாமு"ம் ஒரு அக்ஷரம் என்று வ்ருத்த முறையில் கணக்குப் பண்ணினோமல்லவா? இதையே ஜாதி முறைப்படி செய்தால் இந்த இடத்தில் அந்த அக்ஷரம் ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரையாகிவிடும். "சு" என்பது குறிலானதால் பொதுவாக அதற்கு ஒரு மாத்திரை தானென்றாலும், இங்கே அடுத்து "க்லாமி"ல், க், ல் என்ற இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்தாற்போல் வந்துவிடுகின்றனவல்லவா? அதனால் இங்கே குறிலான "சு"வுக்கே இரண்டு மாத்திரை. "க்லாம்" என்பதில் "ஆ" என்கிற நெடில் (க், ல், ம் என்பவற்றோடு) வருவதால் அதற்கும் இரண்டு மாத்திரை.

பொதுவாக, ஜாதி என்பதையும் வ்ருத்தம் என்றே சொல்லிவிடுகிறார்கள். மீட்டரில் இருப்பதெல்லாம் வ்ருத்தம் என்ற அபிப்ராயத்தில் இப்படிச் சொல்வதாயிருக்கிறது. அதனால்தான் "ஜாதி" வகையைச் சேர்ந்த "ஆர்யா" முதலான மீட்டர்களைக் கூட "ஆர்யா வ்ருத்தம்" என்று சொல்வதாக ஏற்பட்டிருக்கிறது.

காமாக்ஷி அம்பாளைப் பற்றிய ப்ரஸித்த ஸ்தோத்ரமான "மூக பஞ்ச சதி"யில் முதல் நூறு ச்லோகங்கள் ஆர்யா என்ற ஜாதியைச் சேர்ந்தவையே. அந்தப் பகுதிக்கு "ஆர்யா சதகம்" என்றே பெயர். பரம உயர்வு பொருந்தியவள் என்பதால் அம்பாளுக்கே "ஆர்யா" என்று பெயருண்டு. ஆசார்யாளுடைய அம்மாவின் பெயர் ஆர்யாம்பாள் என்பதுதான். பாடப்படும் அம்பாள், பாடல் அமைந்த மீட்டர் இரண்டுக்கும் பொருந்தும்படி "ஆர்யா சதகம் என்று ச்லேஷையாகத் தலைப்புக் கொடுத்திருக்கிறது."

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## நல்ல குடும்பமே குருகுலம்

***மனிதன் உண்மை பேசுதல், உயிரினத்திடம் அன்பு, பெரியோர்களை மதித்து நடத்தல் முதலிய பொது குணங்களை முதலில் பெற வேண்டும். பின்னரே தனது சாதி, குலம் முதலியவற்றிற்கேற்ப விசேஷப் பண்புகளைப் பெற முடியும். பொது குணமில்லாதவனிடம் விசேஷப் பண்பு பரிமளிக்காதுf,,***



கௌசிகன் நல்ல குருவிடம் வேதம், சாஸ்திரம் முதலியதைக் கற்றான். உயர்ந்த நிலையாகிய துறவறத்தைச் சிறு வயதில் ஏற்றான். பிட்சை வாங்கி உடலை பேணினான். மந்திர ஜபங்கள் செய்து உள்ளத்தை வளர்த்தான். எனினும் அவனுக்கு அகந்தை அடங்கவில்லை. அமைதியற்று வாழ்ந்தான்.

அவனது குரு அவனை அழைத்தார். “கௌசிக! நீ கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளாய். ஆனால் நற்பண்புகளை இயற்கையான முறையில் கற்றுத் தருகின்ற குடும்ப வாழ்க்கையைத் துறந்து விட்டாய். அதனால் உனக்கு நற்பண்புகள் வளரவில்லை. அஸ்திவாரம் இல்லாத கட்டடம் போல் உன் துறவற வாழ்க்கை ஆட்டம் கண்டு வருகிறது. பொதுப் பண்புகளைக் கற்பது இன்றியமையாதது. அதற்காக இனி உன்னால் குடும்ப வாழ்க்கைக்குச் செல்ல இயலாது. எனது குரு குலமும் உனக்குப் பயன்படாது. இந்த ஊரின் எல்லையில் தர்மவியாதன் என்றொரு பண்பாளன் உள்ளான். அவனிடம் சென்று அவன் வாழ்க்கை முறையை ஊன்றிக் கவனிப்பாய். நீயே உன்னிடமுள்ள குறைகளை உணர்ந்து திருந்துவாய். உனது துறவறமும் சிறந்ததாக அமையும் என்றார். கௌசிகன் அதற்கு உடன்பட்டான்.

தர்மவியாதன் மாமிசத்தை விற்றுப் பிழைப்பவன். செய்கின்ற தொழிலில் பொறுப்பும், நாணயமும், மதிப்பும் உள்ளவன். தனது அவசியத் தேவை நிறையுமளவே லாபம் சம்பாதிப்பான். தன் குடும்பம் இன்புற்றிருக்க வழி செய்தான்.

தர்மவியாதனின் தொழிலிடம் சென்ற கௌசிகன் முதலில் அருவருப்பு கொண்டான். இவனிடமிருந்து எதனைக் கற்க முடியும்? இங்கிருந்து அகன்றால் நல்லதென நினைத்தான். அதன் குருவிடமிருந்த மதிப்பு அவனை அங்கு நிற்கச் செய்தது. தன் கடையைத் திறந்ததும் தர்மவியாதன் மாமிசத்தைச் சிறு துண்டாக்கி சில துண்டுகளைக் கூரையின் மேல் எறிந்தான். காக்கைகள் அவற்றைக் கொத்திச் சென்றன. அடுத்துச் சில துண்டுகளை வாசலில் எறிந்தான். நாய்கள் அவற்றைக் கவ்விச் சென்றன. தொடர்ந்து வியாபாரம் நடந்தது. மாமிசம் விற்று முடிந்ததும் கடையை மூடிய தர்மவியாதன் தன் வாசலில் தனக்காகக் காத்து நிற்கின்ற துறவியைக் கண்டான். ‘உன் குரு என்னிடம் உன்னை அனுப்பித்தாரோ?’ அவரைப் போன்று சீடரை நல்வழிப்படுத்துகின்ற குருவை எங்கும் காண முடியாது. என்றான். கௌசிகனுக்கு அவனிடம் நன் மதிப்பு ஏற்பட்டது. தான் இங்கு வந்ததன் காரணத்தை இவன் எப்படி அறிந்தான்? என்று வியந்தான்.

தர்மவியாதன் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று கனிகளைத் தந்து உபசரித்தான். தன் தந்தை தாய் முதலிய வயதில் முதிர்ந்த பெரியோர்களை வணங்கிப் பணிவிடை செய்து பின் தன் மனைவி மக்களுடன் உண்டு வெளியே வந்தான். கௌசிகன் தான் இதுவரை அடக்கி வைத்திருந்த ஆவலை இனியும் அடக்க முடியாமல் அவனை கேட்டான். ‘தர்ம வியாதரே! நான் இங்கு வந்த காரணத்தை எப்படி அறிவீர்?’

தர்மவியாதன் கூறினான் – துறவியே! அது மந்திரத்தாலோ, தந்திரத்தாலோ வந்ததல்ல. பெரியோர்களின் நல்லாசி பெற்று அவர்கள் காட்டிய வழியில் நான் வாழ்கிறேன். அறிவின் தெளிவும், ஆத்ம சக்தியும் பெருகுவதை உணர்கிறேன். தெளிந்த அறிவு, பிறரது எண்ணங்களை அறிய உதவுகிறது.

நான் வேடர் குலத்தில் பிறந்தவன். வேட்டையாடிக் கொணர்ந்த மிருகங்களின் மாமிசத்தை விற்பதே எங்கள் குலத்தொழில். என் தந்தையார் முதுமையால் தொழிலிலிருந்து விலகி ஓய்வில் உள்ளார். நான் வேட்டையாடிக் கொல்வதை விட்டுவிட்டேன். பிறர் வேட்டையாடிக் கொணர்வதை வாங்கி விற்கிறேன். எல்லாத் தொழிலிலும் சிறப்பும் உண்டு, தாழ்வும் உண்டு. அதனால் என் தொழில் எனக்கு ஈனமானதல்ல. இத்தொழிலைப்

பொறுப்புடன் பேராசையின்றி முறைப்படி செய்வதே என் முறை. நான் வேறு கல்வி கற்றவனல்ல. உங்களைப் போன்று சாஸ்திரம் படித்தவனுமல்ல. நான் அதர்ம வழியில் செல்ல மாட்டேன். என்னை அண்டியவர்களை நேர்மையுடன் காப்பேன். முதியவர்களிடம் பக்தியுடன் பணிவிடை செய்து அவர்களது ஆசி பெறுகிறேன். நான் மாமிசம் உண்பதில்லை. எதிலும் விருப்பும், வெறுப்பும் இல்லை. உண்மை பேசுவேன். தர்மத்தின் பெயரால் மறைவில் அதர்மம் செய்ய மாட்டேன். ரகசியம் எதுவாயினும் அதனை அறிபவர் பலருண்டு. இறைவன் அவர்களில் மேலானவர். அதனால் ரகசியத்தில் கூடத் தவறு செய்ய மாட்டேன். துஷ்டர் எனக் கண்டால் தூர விலகி நிற்பேன். நல்லோர்களின் முறைப்படி என்னாலான ஸேவையைச் செய்வேன். முட்டாளுக்கும் மூர்க்கனுக்கும் பின் செல்ல மாட்டேன். தற்புகழ்ச்சியும், பிறரை நிந்திப்பதும் என்னால் இயலாதவை.


கெட்ட எண்ணத்தையும், கெட்ட செயலையும், கெட்ட சொல்லையும் நன்கு உணர்ந்து தவிர்ப்பேன். குடும்பத்தினரின் மகிழ்ச்சிக்காக எனதனைத்தையும் விட்டுக் கொடுப்பேன். இதன் பிரதிபலிப்பே போன்று அவர்களும் என் நன்மைக்காக எதனையும் விட்டுக் கொடுக்கிறார்கள். கடமைக்கு முன்னுரிமை தருவேன். நன்னடத்தை, நல்லதென அறிந்ததில் உறுதியுடன் செயல்படுதல், பிறர் மகிழ்ச்சி கண்டு திருப்தியடைதல் புலனடக்கம், இனியபேச்சு, முதலிய நற்பண்புகளை எங்கள் வாழ்க்கை முறையாலேயே நாங்கள் கற்றுப் பழக்கத்திலும் கொண்டுள்ளோம். எங்கள் குடும்பமே எனக்கொரு கல்விக்கூடமாக அமைந்துள்ளது. பெரியோர்களின் ஆசியால் மனத் தெளிவும், நிறைவும் அடக்கமும் பெற்றுள்ளோம். எங்கள் ஆத்மசக்தி தினமும் வளர்ந்து வருவதை உணர்கிறோம். தங்கள் குருநாதர் நாங்கள் பெற்ற சிறப்பைக் காணவே தங்களை அனுப்பியுள்ளார்கள் என்றறிகிறேன் என்றான்.

கௌசிகன் சிறந்த ஆத்மஞானியை சித்த புருஷனை தர்மவியாதர் வடிவிலே கண்டார். வெகு நாட்கள் அந்தச் சூழ்நிலையில் தங்கி அங்கு நிலவுகின்ற பண்பையும், அமைதியையும் உணர்ந்தார். அவர் கண் திறந்தது. குருவின் அருளால் துறவறத்தில் அமைதி கண்டார்.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஜயந்தி - ஸ்ரீ பெரியவாளின் அனுக்ரஹ பாஷணம்



மார்கசீர கிருஷ்ணபக்ஷ த்வாதசி அன்று ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் ஆராதனையை, வைதீகமான முறையிலே பக்தி பூர்வமாக நடத்திக் கொண்டு வருகிறார்கள். -இந்தியன் காலண்டர் -காலண்டர் தான் இன்று ப்ராபல்யமாக இருக்கு. இது மூலம்தான் நாம் பஞ்சாங்கத்தையும் நாம் தெரிந்து கொள்கிறோம். அதன்படி, ஜனவரி எட்டாம் தேதி அன்று என்றைக்குமே நினைவில் நிறைந்து இருக்கும் பெரியோர் அவர்களை, நினைவு தினம் என்று குறிப்பதற்கு அவசியம் இல்லை. தினசரியும், இமைப்பொழுதும் நீங்காதான் தாள்வாழ்க என்று நாம் சொல்கிறோமோ, அந்த விதத்திலே, சாஸ்திரத்தையும், சரித்திரத்தையும் காப்பாற்றி, சரித்திரத்தையும் படைத்தவர்.

நம்முடைய நாட்டிலே இருக்கக் கூடிய பல்வேறு சம்பிரதாயங்கள், பல்வேறு பிரிவுகள், பல்வேறு உட்பிரிவுகள்; இப்படி அனைத்துத் தரத்து மக்களுக்கும் தர்ம உபதேசம் செய்து, அவரவர்களின் சம்பிரதாயத்தையும், அவரவர் நடைமுறை பழக்க வழக்கத்திற்கும் அவரவர்கள் சம்பிரதாயத்தை அவரவர்கள் பரிபாலனம் செய்ய வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன், மக்கள் தர்மத்தினுடைய அடிப்படை அம்சத்திலிருந்து விலகாமல் இருப்பதற்கு, அதே சமயத்திலே, தர்மம் என்பது அடிப்படைவாதம் என்பதாக இல்லாமல், fundamentalist என்று சொல்லாமால்,

foundation என்ன இருக்கிறதோ, அடித்தளம் என்ன இருக்கிறதோ, அதை அனைத்து மக்களும் தெரிந்து கொள்ளும் விதத்திலே நிறைய காரியம் செய்தார்கள். திருப்பாவை, திருவெம்பாவை வகுப்புகள், ஆஸ்பத்திரியிலே இருக்கக் கூடிய பக்தர்களுக்கு விபூதி, குங்கும பிரசாதம் அளித்தல், பிடி அரிசி திட்டம், பூசாரிகள், குருக்கள், பட்டாசாரியார்களுக்காக கச்சிமூதூர்அர்ச்சகர் க்ஷேமநல நிதி.

வயதான வித்வான்களுக்கு வேதபாடநிதி. சமுதாயத்தின் மூலமாக உபகாரமும், சன்மானமும், ஆதரவும் அளிக்கப்பட வேண்டும். அதுமாத்திரம் அல்ல , சமுதாயம் நம்முடைய தேவைகளை உணர்ந்து இருக்கிறது. அவர்களுக்கு உதவுவதற்கு சமுதாயம் தயாராக இருக்கிறது என்பதை உணர்த்தும் விதத்திலே இந்த நிதி ஆரம்பிக்கப்பட்டது.

அக்னி உபாசனை-அக்னி உபாசனை என்பது பல நிலையிலே நாம் செய்து வருகிறோம். அக்னிஹோத்திரிகள் செய்து வருகிறார்கள். அக்னி உபாசனை , அக்னி வழிபடுவது என்பது கோவில்களிலே, நம் வீட்டிலே, பல இடங்களிலே அனைத்து தரப்பு மக்களும் செய்து வருகிறார்கள். அந்த அக்னி உபாசனையை வழிவழியாகப் போற்றக் கூடிய குடும்பத்தைச் சார்ந்த நானி பல்க்ஹிவாலா அவர்களை (Nani Palkhivala) தலைவர்களாகக் கொண்டு இந்த வேதபாடநிதி டிரஸ்ட் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. பராசரன் போன்றவர்கள் அதில் மெம்பர்களாக இருந்து, டிவிஎஸ் குடும்பத்தினர்கள் பலரும் சேர்ந்து அந்த வேதபாட நிதியை நடத்திக் கொண்டு வருகிறார்கள். பாரதீய வித்யாபவனின் துணையோடு இந்த விஷயம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆகவே, இது தர்மத்தினுடைய ஒரு வியாபகத்தன்மை -சர்வே ஜனா சுகினோ பவந்து -சரித்திர ரீதியாகவும், சித்தாந்த ரீதியாகவும் இந்த தர்மமானது உலகளாவிய தர்மம், சாஸ்திரம் என்பதை உணர்த்தி, பல்வேறு பணிகளை அவர்கள் செய்து இருக்கிறார்கள். அந்தப் பணிகள் எல்லாம் நினைவு கூறும் விதத்திலே, வருஷா வருஷம் 1995ம் வருஷம் முதல், இங்கு இந்த பாரதிய வித்யா பவனிலே, இந்தத் தேதியிலே ஸ்ரத்தாஞ்சலி விழாவாக இதைச் செய்து வேதபாட நிதி மூலமாக, வேதபாராயணம் மூன்று வேதத்திலேயும், வேதபாராயணத்தை வைத்து, இந்தப் பணியை சிறப்பாகச் செய்து வருகிறார்கள்.

நம்மிடத்திலே அனைத்தும் இருக்கிறது. நம்மிடத்திலே விஞ்ஞானம் இருக்கிறது, சங்கீதம் இருக்கிறது, ஆயுர்வேதம் இருக்கிறது, மந்திர சாஸ்திரம் இருக்கிறது. இப்படி நிறைய இருக்கிறது. வேதம் முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. சாஸ்திரங்கள் நமக்கு முழுமையாகக் கிடைக்க வில்லை. ஆனால், கிடைத்தவற்றிலே, இவ்வளவு

விஷயங்கள் இருக்கின்றன. நம்மிடத்திலே இருக்கக் கூடியவற்றை அறிந்து கொள்ள வசதியும், ஆர்வமும் தேவைப்படுகிறது. ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். ஆகவே, இந்த நல்ல வாய்ப்பை உபயோகப்படுத்தி-இதெல்லாம் புத்தகமாக வந்து இருக்கின்றன. ஆச்சாரிய சுவாமிகளின் புஸ்தகங்கள் , மற்றும் கேசட்கள் வந்திருக்கின்றன. அவர்கள் அனுமதி அளித்ததைக் கொண்டு, அன்று இருந்த உபகரணங்களை, கருவிகளைக் கொண்டு , அவர்களின் குரலைக் கேட்பதற்கு வசதியாக, சில பேர், பக்தர்கள் பணி செய்து இருக்கிறார்கள்.

இது போன்ற பல இடத்திலேயும் நீங்கள் செய்து, அந்தப் பெரியவர்களின் ஞாபகத்தை,மேன்மேலும் நடத்திக் கொண்டு வருகிறார்கள்-தெய்வத்துள் தெய்வம் என்பதாக. பல நிகழ்சிகளை வெளிநாட்டிலும் நடத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த குரு பக்தியை மேன் மேலும் வளர்த்து, அதன் மூலம், வேதங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும், பக்தி மார்க்கத்திற்கும், நம்மால் என்ன செய்ய முடியுமோ, பணிகளையும், பணிவிடைகளையும் செய்வது தான் விடையாக இருக்க முடியும். அவருக்கு சொல்லக்கூடிய பதிலாக, நாம் செய்யக்கூடிய செயலாக இருக்க முடியும். அந்த சேவையிலே, ஆச்சாரியார் ஸ்வாமிகளின் சேவையிலே அனைவரும் ஈடுபட்டு, குரு பக்தியின் மூலமாக, சம்சாரம் வாழ்க்கையிலே , லௌகீகமான தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டு, லௌகீகத்துடன் வாழ்க்கை தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டு, ஆன்மீக முறையிலேயும் , ஞான மார்கத்தில், அந்த ஆச்சாரிய பக்தி மேன்மேலும் வளர்ந்து சுகமும், சாந்தியும் மேன்மேலும் வளர வேண்டும்.

ஹர ஹரப் பார்வதி பதயே, ஹர ஹர மகாதேவா

## ரிக் வேதத்தில் கூறப்பட்டுள்ள சில நல்ல கருத்துக்கள்

**ருக்-9,75,2**

6. உண்மை பேசுவது இனிமையையும் அன்பையும் உண்டாக்குகிறது.

**ருக்-7,61-5**

7. உண்மை ஒரு ஸ்திரமான அஸ்திவாரத்தின் மீது உள்ளது.

**ருக்-9,73,6**

8. பாவிகள் உண்மை வழி நடக்க முடியாது.

**ருக்-7,61,5**

9. மனித சமுதாயத்தின் எதிரிகள் தீயவழியினை கடைப்பிடிப்பவர்கள்.

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## கஜேந்திர மோக்ஷம்

1. பரீக்ஷித் மஹாராஜனே ! த்ரிகூடம் என்று பெயர்பெற்ற ஒருமலை. பாற்கடலால் சூழப்பட்டதாய் பத்தாயிரம் யோசனை உயரம் உள்ளதான புகழ்பெற்றதான மலை.

2. அங்கு சாபத்துக்குள்ளான ஒரு யானை, முதலை ஒன்றினால் திடீரென்று பீடிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட வேதனையால் அவதிப்பட்ட யானை தன் பலத்தால், முயன்று வெளிவர முயன்றது.

   குறிப்பு : 'தைவசோதிதோ' தெய்வத்தால் சோதிக்கப்பட்ட ஒவ்வொருவர் வாழ்விலும், இந்த சோதனை உண்டு. வேதனையும் உண்டு. சோதனையினின்றும் வேதனையினின்றும் விடுபடுவது எப்படி என்று சிந்திக்க வைப்பது இந்த கஜேந்திர மோக்ஷம். தெய்வ சோதனை யாருக்கு வந்தது எப்படி வந்தது என்பது பின்னொரு ச்லோகத்தால் விளக்கம் பெறுவோம்.

3. இந்த யானையின் குரலைக் கேட்ட மற்ற யானைகள், அந்தத் துயர ஒலியால் அந்த யானை இருந்த இடம் போய் முதலையினிடம் இருந்து விடுவிக்க முயன்றும் இயலவில்லை.

4. இப்படி முதலை ஒருபக்கம் இழுக்க, மற்ற யானைகள் ஒருபுறம் இழுக்க, மிகப்பெரிய இடர் ஏற்பட்டது. அந்த இடரில் யானை தவித்தது.

5. இப்படி அந்த யானை சங்கடம் அடைந்த போது, அந்த யானையின் உள்இருந்து ஆத்மா இந்த இக்கட்டிலிருந்து விடுபட பகவானின் பெயரைச் சொல்லி அழைக்க ஆரம்பித்தது.

### யானையின் குரல்

6. 'இவ்வுலகின் கண் சாந்தமாய் இருப்பவனுக்கு நமஸ்காரம். அதே ஸமயம் உலகின் பயங்கரமானவனுக்கு நமஸ்காரம். குணங்களின் அறமே வணக்கம், தனியொரு சிறப்புடையோனே, ஞான வடிவானவனே !' பெருநிதியானவனே நமஸ்காரம்.

7. உலகுயிர்களின் உறைவிடமானவனே (உடலினுள் கரந்துள்ளவன்) எல்லாவற்றிற்கும் தலையாயவனே ! ஸாக்ஷியானவனே ! ஆத்மாவிற்குக் காரணமான பரமாத்மாவே ! ப்ரக்ருதி தத்துவத்தின் தலையாய காரணனே நமஸ்காரம்.

குறிப்பு : பஞ்ச பூதங்கள் 5 : தன்மாத்திரைகள் 5, புலன்கள் 5, புலனறிவுகள் 5, மனம், புத்தி, அஹங்காரம் இவைகள் அடங்கிய தொகுதி ப்ரக்ருதி.

8. இவ்வுலகின் எல்லாச் செயல்பாடுகளுக்கும் காரணமானவனே நமஸ்காரம். உமக்கு ஒரு காரணமும் அமைய முடியாத பரம்பொருளே! நமஸ்காரம். அசையும் பொருள்கள் அசைாப் பொருள்கள், இவற்றின் மாற்றங்களுக்கு அற்புதமான காரணமானவனே! நமஸ்காரம். எல்லா வேதங்கள், ஆகமங்கள் இவைகளின் கடலே நமஸ்காரம். மோக்ஷ ஸாம்ராஜ்யமாய், அதை அடையும் மந்திர பாராயணமாய் அமைந்தவனே நமஸ்காரம்.

9. அவன் ஒப்பற்ற ஒருவன் அவனைப் போல் வேறு யாரும் எங்கும் இல்லை. எவர் எல்லாம் அந்த பகவானின் அடியார்களோ அவர்களை விரும்புகிறான். அவன் அவனது ஜன்மங்கள் சரிதம் அற்புதமானது என்ற அவனனுபவமாம் ஆனந்தக் கடலில் அமிழ்ந்தவர்கள் இசைக்கின்றனர்.

10. உலகின் கண் உள்ள சித், அசித்துக்களாய் தோன்றுகின்ற அந்த பகவானுக்கு நமஸ்காரம். எல்லாற்றிற்கும் ஒரு தனி வித்தாகிய, எல்லாவற்றிற்கும் மேலான பரமபுருஷனுக்கு நமஸ்காரம்.

11. எவரிடத்து எல்லாமும், எவனால் எல்லாமும் உள்ளனவோ, எல்லாம் எவன் இடத்து உள்ளதோ, உயர்வுக்கெல்லாம் உயர்வாகியவனும் தானாகத் தோன்றியவனுமான அப்படிப்பட்ட பரமபுரஷனை அடைக்கலம் புகுகிறேன்.

12. எவனுடைய பதத்தை (இடத்தை : நிலையை) தேவர்களும், ரிஷிகளும் அறிய மாட்டார்களோ அவனை துதிக்க எந்த ஜந்துவால் இயலும். எப்படி நடனத்தை, செயல்களை அறிய முடியாதோ அப்படி அவனை அறிய முடியாது.

13. அவனது தோற்றம், செயல், பெயர், உருவம், குணம், தோஷம் இவைகளை அறிய முடியாதோ, அவன் அப்படியிருந்தும் உலகின் தோற்றம் மறைவு இவைகளைத் தன் விளையாட்டுச் செயலால் காலமெல்லாம் செய்கின்றான்.

(தொடரும்)

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 6

பி. ஆர். கண்ணன்



வியாஸ பகவான், ஸ்காந்த புராணம், பிரம்ம காண்டம், ஸேது மாகாத்மியம் என்ற பகுதியில், கச்யபரின் மீதிக்கதையைச் சொல்கிறார். கச்யபர் நேராக தன் குருவான சாகல்ய முனிவரிடம் நடந்ததைச் சொல்லி வருத்தப்பட்டார். சாகல்யர் கச்யபரை வெகுவாகக் கடிந்துகொண்டார். அவர் சொன்னார்: 'வைத்தியனுக்குத் திறமை இருந்தும் நோயாளியைக் காப்பாற்றவில்லை யென்றால், அது பிரம்மஹத்தி தோஷத்திற்கு சமானம். நோயாளியின் பிராணன் கழுத்து வரை வந்தாலுங்கூட, சிகித்ஸை செய்ய வேண்டியது கடமை; காலத்தின் போக்கு யாராலும் நிர்ணயிக்க முடியாதது' என்று. **யாவத்கண்டகதாஃ ப்ராணாஃ முமூர்ஷோர்மாநவஸ்ய ஹி । தாவச்சிகித்ஸா கர்தவ்யா காலஸ்ய குடிலா கதிஃ ।।** கச்யபரின் பாவத்திற்கு பிராயச்சித்தமே கிடையாது என்றார். பின்னர் கச்யபரின் சீலத்தை உணர்ந்து, சாகல்யர் கருணையினால் அவரை தெற்கே கந்தமாதன பர்வதத்தில் காயத்ரி, ஸாவித்ரி தீர்த்தங்களில் பிராயச்சித்தம் செய்யுமாறு அருளினார். அவ்வாறே கச்யபர் அங்கு சென்று ஒரு மண்டலம் தங்கி, ஸ்னானம், ஜபம், வ்ரதம், தரிசனம் என்று தீவிரமாக உபாஸித்து பாபவிமோசனம் பெற்றார்.

தக்ஷகன் கச்யபரைத் திருப்பியனுப்பிவிட்டு, தான் எவ்வாறு காவலை உடைத்து பரீக்ஷித்தின் மாளிகையில் நுழைந்து காரியத்தை முடிப்போம் என்று கவலை கொண்டான். இந்த மூடனாகிய ராஜா தானம் முதலிய புண்யகாரியங்களில் அறவே ஈடுபடாமல் தன்னைக் காத்துக்கொள்வதில் முழுமுயற்சி செய்வது வியப்பானது என்று நினைத்தான். மாளிகையை அடைந்து, தான் ஒரு சிறிய புழுவாக மாறி, தன் ஸகாவான

ஸர்ப்ப-பிராம்மணர்களிடம் உள்ள பழங்களில் ஒன்றில் புகுந்தான். பிராம்மணர்கள் தெய்வப் பிரசாதம் என்று தந்த பழத்தட்டினை வாங்கிய காவலர்கள் ராஜாவிடம் சேர்ப்பித்தனர். ஸந்தியாகாலம் ஆகிவிட்டது, இனிமேல் தனக்கு ஆபத்து ஒன்றும் இல்லை என்று நினைத்த பரீக்ஷித் ஒரு பழத்தை எடுத்து வெட்டி, உள்ளே சிறியதொரு கரிய பூச்சியைப் பார்த்தான். போதாத காலம், இப்பூச்சி என்ன செய்துவிடும் என்ற அசட்டு தைரியத்தில் அதனை எடுத்து தன் கழுத்தில் வைத்தான். அடுத்த க்ஷணம், எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, பூச்சி தக்ஷகனாக மாறி, பெரிய உருவத்துடன் பரீக்ஷித்தின் சரீரத்தை மேலே தூக்கிப்போய், தீண்டி, ராஜாவின் சரீரம் பஸ்மமாக விழுந்தது. பிரஜைகளின் துக்கத்திற்கு அளவில்லை.

**ஜனமேஜயன்**

சிறு பாலகனாக இருந்த ஜனமேஜயன், பரீக்ஷித்தின் புத்திரன், சீக்கிரத்திலேயே ராஜாவாக்கப்பட்டான். வேதம், தனுர்வேதம் எல்லாம் கசடறக் கற்ற ஜனமேஜயனுக்கு காலக்கிரமத்தில் காசிராஜாவின் புத்திரியுடன் விவாகம் நடந்தது. அவன் நடத்திய ராஜாங்கம் பூர்வத்தில் தர்மபுத்திரர் ராஜ்யம் போல் தர்மபரமாக இருந்தது. உத்தங்கர் என்ற ஒரு முனிவர் தக்ஷகனிடம் தனிப்பட்ட விரோதம் கொண்டவர். அவர் ஜனமேஜயனிடம், 'உன் தகப்பனார் முனிவர் சாபத்தினால் மரித்தார் என்பது உண்மையாயினும், தக்ஷகன் கச்யபரைத் திரவியம் தந்து திருப்பியனுப்பியதுதான் பிரதான காரணமாயிற்று; ஆகையால் நீ தக்ஷகனைப்பழி வாங்கவேண்டும். ஒரு ஸர்ப்பயக்ஞம் நடத்தி அதில் தக்ஷகன் உள்பட பல ஸர்ப்பங்களை பலியாக்கவேண்டும்' என்றார். அவ்வாறே கங்காதீரத்தில் நூதன சதஸ்தம்ப மண்டபத்தில் ஸர்ப்பயக்ஞம் ஏற்பாடு செய்தார். அவரே ஹோதாவாக இருந்து ஸர்ப்பஸத்ரத்தை நடத்தினார். பல ஸர்ப்பங்கள் அக்கினியில் மரித்தன. உத்தங்கர் தக்ஷகனை ஆஹ்வானம் செய்ய, தக்ஷகன் இந்திரனைச் சரண் புகவே, மிக்க கோபத்துடன் உத்தங்கர் இந்திரனையும் பலி கொடுப்பதற்காக ஆஹ்வானம் செய்தார். தக்ஷகனும் இந்திரனும் ஜரத்காரு என்ற முனிவரின் புத்திரரான ஆஸ்தீகரை ஸ்மரிக்கவே, ஆஸ்தீகர் உடனேயே யக்ஞசாலைக்கு வந்து, ஜனமேஜயனின் உபசாரங்களை ஏற்று, யக்ஞத்தை உடனே நிறுத்துமாறு பணித்தார். மகரிஷியான, ஞானியான ஆஸ்தீகரின் கூற்றை மறுக்கமுடியாத ஜனமேஜயன் யக்ஞத்தை நிறுத்தினான். அப்போது வியாஸர் அங்கு வந்தார். ஜனமேஜயனுடைய மனச்சாந்திக்காக, வியாஸர் தன் சிஷ்யர் வைசம்பாயனர் மூலமாக மகாபாரதத்தை அவனுக்கு உபதேசித்தார். இப்படித்தான் நமக்கு மகாபாரதம் கிடைத்தது. மகாபாரதம் முழுமையாகக் கேட்டும் ஜனமேஜயனுக்கு மனதில் சாந்தி

கிட்டாததால், வியாஸரிடம் அவன் பிரார்த்திக்க, வியாஸர் மேற்கொண்டு தேவி பாகவதத்தை தானே அவனுக்கு உபதேசித்தார். இப்படித்தான் நமக்கு தேவி பாகவதம் கிடைத்தது.

வியாஸர் அப்போது ஜனமேஜயனிடம், 'நீ பாரதம் கேட்டாய்; தானங்கள் கொடுத்தாய்; முனிவர்களைப் பூஜித்தாய். எனினும் உன் பிதாவுக்கு ஸத்கதி கிடைக்கவில்லை. துர்மரணம் அடைந்த அவர் அந்தரிக்ஷத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறார். அதனால் நீ செய்யவேண்டியது, தேவி ஆலயம் கட்டி, தேவிபூஜை, தேவி யக்ஞம் செய்து, தேவி பாகவத சிரவணம் செய்யவேண்டும்' என்று உபதேசித்து, தானே தேவி பாகவதத்தை முறையாக அவனுக்கு அருளினார். அவர் சொன்னார்: 'தேவி பாகவதத்தைக் காட்டிலும் பலவித ரஸங்கள் நிறைந்ததும், ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவிப்பதுமான வேறொரு சிறந்த புராணம் இல்லை. யாருடைய சித்தத்தில் தேவி மிக்க பிரேமையுடன் வசிக்கிறாளோ, அவர்களே பாக்கியசாலிகள், ஞானத்தை அடைந்தவர்கள்' என்று. **தே ஸபாக்யாஃ க்ருதப்ரஜ்ஞா தந்யாஸ்தே ந்ருபஸத்தம ந யேஷாம் சித்தே ஸதா தேவீ வஸதி ப்ரேமஸங்குலே ।।**

(வளரும்)

***ருக்,1,71,3***

*10. இடைவிடாது உழைப்பவர் மட்டுமே சுகத்தினை சுவைக்க முடியும்.*

***ருக்-1,39,10***

*11. தர்ம, அர்த்த,காம,மோக்ஷ சதுர்வித புருஷார்த்தங்களைத் தேடுவோர் நிரந்தரமாக உழைப்பவர்கள்.*

***ருக்8-2-18***

*12. சுறுசுறுப்பானவர்களையே கடவுள் நேசிக்கின்றார். சோம்பேறிகளை அல்ல.*

***ருக்.10,191,4***

*14. மனம் தெளிவாக செயல்படில் வாழ்வில் வெற்றிகிட்டும்.*

***ருக்1-191-2***


*15. நீங்கள் யாவரும் ஒன்றாகச் செல்லுங்கள் ஒரே குரலில் பேசுங்கள். உங்கள் மனம் ஒரே எண்ணம் கொண்டதாக அமையட்டும்.*

***ருக்,9,71-1***

*16. விழிப்புடன்இருப்பவர் எதிரிகளிடம் இருந்தும் பாபிகளிடம் இருந்தும் தங்களை காப்பாற்றிக் கொள்வர்.*

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 25

## வடிவேல் ஓரன்பர்



நான் சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவன். பெரியவங்களைப் பற்றிக் கேட்டிருக்கேன் . பார்த்ததில்லை. ஒரு நாள் முதன்முதலாக பெரிய காஞ்சீபுரம் ராஜவீதியில் நடந்து போகும்போது பார்த்தேன்.

எனக்கு கஷ்டமாயிருக்கு என்று கூறி வணங்கினேன். கஷ்டப்படாதே என்றார். அதுமுதல் அவர் காஞ்சியில் எங்கு தங்கியிருக்கிறாரோ அங்கு விடியற் காலையில் சிறிது பாலை சேர்த்து வணங்கி வருவது வழக்கம்.

என் மகள் சின்னவளாக இருந்தபோது கால்விரல்கள் சற்று மடிந்து இருந்ததால் காலை கீழே ஊன்றி நடக்க முடியாதிருந்தது. ஒரு நாள் பெரியவரிடம் என்னகுறை செய்தேனோ இப்படி உள்ளது சாமிதான் சரியாக்க வேண்டுமென்றேன். சில நாட்களில் கால் சரியாகிவிட்டது.

என் இரண்டாவது மகளுக்கு கல்யாணம் செய்யப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு சம்பந்தம் வந்தது. அது எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் மிகவும் தொந்தரவு செய்ய நான் சாமியைக் கேட்டுத்தான் செய்வேன் என்று சொல்லியனுப்பிவிட்டேன். மறு நாள் சிவாஸ்தானத்தில் அவரிடம் கூற அவர் ‘நேரம் வரும்போது கல்யாணம் நடக்கும்’’ என்று கூறிவிட்டார். பிறகு ஒரு தடவை அவரை தர்சிக்கச் சென்ற போது ‘‘என்ன கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டாயா’’என்றார். நான் இல்லை என்று கூற பகவான் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டார் போய் கல்யாணத்தைச்செய்’’ என்றார். ஒரு நல்ல குடும்பம் என் பெண்ணை கல்யாணம் செய்து கொள்ள விரும்பியது.

நல்ல முறையில் கல்யாணம் நடந்தது. அவர் அருளால் எட்டு ஆண்டுகளுக்குப்பின் ஓர் ஆண் குழந்தை பிறந்து அனைவரும் நலமாயிருக்கிறார்கள்.

ஒரு சமயம் சாமி கலவையில் தங்கியிருந்தார்கள். நான் குருவாரம் தவறாமல் அவரை தர்சிக்கச் செல்வேன். அன்று நான் போன பஸ் தாமதம் மட்டுமல்லமல் ரிப்பேர் ஆகி இரவு 9 மணிக்கு கலவை போய் சேர்ந்தேன். க்ரீஸ் ராணி சாமியிடம் பேசிக் கொண்டிருந்ததால் 10 மணிக்குத்தான் எனக்கு தர்சனம் கிடைத்தது. ஏன் அகால வேளையில் வருகிறாய் என்று கேட்டார். மேலும் என்னுடைய வ்யாபாரம் சரியாக நடக்கவில்லை நஷ்டமாகிறது என்றேன். ஏன் உனக்கு மட்டும் நஷ்டம் என்று கேட்க ரேஷன் கன்ட் ரோலில் குறைவான விலையில் விற்கப்படுவதால் என் கடைக்கு யாரும் வருவதில்லை என்றேன். ''கன்ட் ரோல் எடுத்தால் சரியாகுமா'' என்றார். எடுத்தால் உடனே தெரியுமென்றேன். பிறகு அவரிடம் விடைபெற்றுக் கொண்டு காஞ்சி வந்தேன். மறு நாள் காலை ''கன்ட் ரோல் ரத்து'' என்று செய்தி வந்தது. வ்யாபாரமும் நன்றாக நடந்தது என் கஷ்டங்களும் குறைந்தன. எல்லாம் சாமியின் கருணை.

### ஸனாதன தர்மப்புதிர்கள்
### மே விடைகள்

1. இருமலும் ரோகமும் என்று தொடங்கும் பாடல்
2. கொடுங்காளூர் கேரளம்
3. ப்ரம்மாவின் மானஸபுத்ரி
4. தேவலோகம்
5. வீதி விடங்கர்
6. ஸ்ரீருத்ரத்தை 121 முறை ஜபிப்பது
7. சரஸ்வதி
8. அனலன், அணிலன், ஆபத்சைவன், ஸோமன், தரன், த்ருவன், ப்ரத்யூஷன், ப்ரமாசன்.
9. மூர்த்தி நாயனார்.
10. சூன்ய ஸம்பாஷணை

### ஸனாதன தர்மப்புதிர்கள்
### ஜூன் வினாக்கள்

1. நீல மாதவன் இது யார்?
2. நீரால் விளக்கு ஏற்றிய சிவனடியார்
3. ரிக்வேதம் என்ன கோத்ரம்?
4. கேரளத்தின் முக்ய நதி
5. ஐராவதம் நேர் தமிழ்ச்சொல் என்ன?
6. திரு நள்ளாறில் உள்ள விடங்கஸ்தலம்
7. கபித்வஜர் யார்?
8. மந்த்ரத்திற்கு தேவையான மூன்று என்ன?
9. மனுஸ்ம்ருதியை மருந்து என்று சொல்லும் வாக்யம்
10. உத்பாதங்களின் போது அவைகளை நாசம் செய்விக்கும் அப்பைய்ய தீக்ஷிதரின் ஸ்துதி

# மகாகவி
# காளிதாஸரின் ஸ்தோத்ரங்கள்

## சிவமகிமை



சிவன் பார்வதியின் தவத்தையும் சிவபெருமானையும் வேறு உருவில் வந்து பரிகசிக்க அதற்குப் பதிலாக பார்வதி சிவபெருமானின் பெருமைகளை கூறுகிறாள். அவர் பரிகசிக்கும் ஸ்லோகம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஸ்லோகமாகப் பதில் கூறுகிறாள். இது ஸ்தோத்ரம் என்று சொல்ல முடியாவிட்டாலும் சிவபெருமானின் பெருமைகளை கூறும். பார்ப்போம். (சிவன் மகா ஏழை, வஸ்த்ரம் கிடையாது, கிழ எருது வாகனம் ஸ்மசான வாஸி விரூபாக்ஷன் தாய் தந்தையர் கிடையாது. இப்படி கிண்டல்கள் நிறைந்தவை அவருடைய பேச்சு.

**उवाच चैनम् परमार्थतो हरम् न वेत्सि नूनम् यत एवामात्थ् माम् ।**
**अलोकसामान्यम्चिन्त्यहेतुकम् द्विषन्ति मन्दाश्चरितम् महात्मनाम् ।।**

**உவாச சைனம் பரமார்ததோ ஹரம் ந வேத்ஸி நூனம் யத ஏவமாத்த மாம்**
**அலோகஸாமான்யம் அசிந்த்யஹேதுகம் த்விஷந்தி மந்தாசரிதம் மஹாத்மனாம்**

எக்காரணத்தால் இவ்வாறு கூறுகின்றீரோ சிவபெருமானை நீங்கள் அறியவில்லை என்பது உண்மையே. மற்றவர்கள் போல் இல்லாததும் அறியமுடியாததாக இருக்கும் மகான்களின் சரிதத்தை அற்பர்கள் வெறுக்கின்றார்கள்.

**विपत्प्रतीकारपरेण मन्गलम् निषेव्यते भूतिसमुत्सुकेन वा ।**
**जगच्चरण्यस्य निराशिशततः किमेभिराशोपहतात्व्रुत्तुभिः ।।**

**விபத்ப்ரதீகாரபரேண மங்களம் நிஷேவ்யதே பூதிஸமுத்ஸ்கேன வா**
**ஜகச்சரணஸ்ய நிராசிஷஸ்தத: கிமேபிராசோபஹதாத் வ்ருத்திபி:**

தீங்கைப் போக்கவும், செல்வத்தில் ஆசையுடையவனால் மங்களப் பொருள் அனுபவிக்கப்படுகிறது. உலக ரக்ஷகரும் ஆசையற்றவருமான சிவனுக்கு இம்மங்களப் பொருளால் யாது பயன்? (சிவனோ குறை இல்லாதவர் ஆசையற்றவர், ஆசையயை

*உண்டாக்கிமனதை கெடுக்கும் இப்பொருள்கள் அவருக்குத் தேவையில்லை என்பது தாத்பர்யம்)*

**अकिन्चन सन् प्रभव; स सम्यदाम् त्रिलोकनाथ: पित्रुसद्मगोचर:**
**स भीमरूप: शिव इत्युदीर्यते न सन्ति याथार्थ्यविद्: पिनाकिन; ।।**

**அகின்சன ஸன் ப்ரபவ: ஸ ஸம்பதாம் த்ரிலோகனாத:பித்ருஸத்னகோசர:**
**ஸ பீமரூப: சிவ இத்யுதீர்யதே ந ஸந்தி யாதார்த்யவித: பினாகின:**

*தான் வறியவராக இருந்தும் செல்வங்களுக்கெல்லாம் காரணமாகிறார். அவர் பயங்கர ரூபமுடையவராயினும் சிவன் (மங்களம்) என்று கூறப்படுகிறார். சிவபெருமானின் உண்மைத்தன்மையை அறிந்தவர் யாருமில்லை.*

**विभूषणोत्भासि पिनद्दभोगि वा गजजिनालम्बि दुकूलधारि वा ।**
**कपालि वा स्यादथवेन्दुशेकरम् न विश्वमूर्तेरवह्दार्यते वपु: ।।**

**விபூஷணோத்பாஸி பினத்தபோகீ வா கஜாஜினாலம்பி துகூலதாரீ வா**
**கபாலி வா ஸ்யாத் அத இந்துசேகரம் ந விஸ்வமூர்தேர் அவதார்யதே வபு:**

*உலகத்தையே தன் சரீரமாகக்கொண்டவருக்கு பாம்புகள் அணியாகலாம் நல் ஆபரணங்கள் ஆகலாம், பட்டுத்துணி அணியலாம், அல்லது யானைத் தோலை அணியலாம், கபாலமேந்தலாம், இந்து சேகரனாகவும் இருக்கலாம் இவை நிச்சயக்கப்படுவதில்லை.*

**ततन्गासम्सर्गमवाप्य कल्पते ध्रुवम् चिताभस्मरजो विशुद्दये ।**
**तथा हि न्रुत्याभिनयक्रियाच्च्युतम् विलिप्यते मौलिभिरम्बरौकसाम् ।।**

**தத் அங்கஸம்ஸர்கம் அவாப்ய கல்பதே த்ருவம் சிதாபஸ்மரஜோ விசுத்தயே**
**ததா ஹி ந்ருத்யாபினயக்ரியாச்சுதம் விலிப்யதே மௌலிபிரம்பரௌகஸாம்**

*அவருடைய தேஹ ஸம்பத்ததினால் சிதையின் சாம்பல் சுத்தமாகிறது. பிறவற்றையும் தூய்மையாக்குகிறது. எப்படியென்றால் நர்தனகாலத்தில் செய்யப்படும் அபினயத்தால் உதிரும் சாம்பல் தேவர்களின் தலைகளால் தரிக்கப்படுகிறது.*

*(தொடரும்)*

# வாழ்வின் நான்கு நிலைகள்

இராமாயணம்

## 4. ஸன்யாஸம்

மூவாசைகளையும் துறந்த ஆணவம் அழிந்து இறை பாதங்களையே எப்போதும் நினைந்து ஜபித்துக் கொண்டிருப்பதால் ஸன்யாஸி. இவரை அடையாளம் கண்டு வணங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

காஷாய தண்ட மாத்ரேண யதி:
பூஜ்ய: ந ஸம்சய என்பது வாக்கு

இதற்கு இடையில் காஷாயமும் கையில் கோலும் கொண்டிருப்பவர் ஸன்யாஸி. அவரை கண்ட உடனேயே வணங்கி பூஜிக்க வேண்டும். இதில் சிறிதும் சந்தேகம் கிடையாது என்பதே இதன் பொருள்.

கலியுகத்தில் நாராயண தரிசனம் செய்வதற்கு இரண்டு வழி உண்டு. ஒன்று ஸாலக்கிராம தரிசனம். மற்றது ஸன்யாசி தரிசனம். இந்த ஸன்யாஸிகள் நாராயண ஸ்மரணத்திலேயே வாழ்ந்து நாராயணனாகவே ஆனவர்கள்.

சாதாரணமாகவே ஸன்யாசிகள் எப்போதும் அமைதியாகவும், மனதில் இறைசிந்தனையுடனும், யோகா பயிற்சி செய்பவர்களாகவும், பழங்கள், கிழங்குகள் ஆகியவற்றை உண்டு கானகத்தில் மனித ஸஞ்சாரம் இல்லாமல் தனித்து வாழ்வது தான் உத்தமம் என்று கூறப்பட்டுள்ளது. இவர்கள் கிராமங்களில் ஒருநாளும், நகரங்களில் ஐந்து நாட்களும் தங்கி இருக்கலாம். அதற்கு மேல் ஓரிடத்தில் தங்க கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது. இவர்கள் பிக்ஷை எடுத்துத்தான் உண்ண வேண்டும் என்ற நியதியும் உள்ளது. மழைக்காலத்தில் மட்டும் வெளிப்பயணம் மேற்கொள்ளாமல் ஒரே இடத்தில் நான்கு மாதங்கள் தங்குவதாக முடிவு எடுத்து தங்கலாம். இதற்கு சாதுர்மாஸ்ய விரதம் என்று பெயர். தற்போது இது சாதுர்மாஸ்ய வ்ரதம் என்று இருந்தாலும் நான்கு பக்ஷங்களாக மாறி இரண்டு மாதங்கள் என்று நடைமுறையில் கொண்டு வரப்பட்டுள்ளது.

முதலில் பிரம்மசாரியாக இருந்து கிருகஹஸ்தனாகி, வானப்ரஸ்தனாகி பின்பு ஸன்யாஸம் மேற்கொள்வதற்கு கிரம ஸன்யாஸம் என்று பெயர். பிரம்மசாரியாக இருக்கும் போதோ, அல்லது கிருஹஸ்தனாக இருக்கும் போதோ ஸன்யாசம் பெற வேண்டிய பக்குவம் ஏற்பட்டு விட்டால் ஸன்யாஸம் மேற்கொள்ளலாம் என்று விரக்தி ஏற்படுகிறதோ அன்றே ஸன்யாஸம் கொள்ள இடமிருக்கிறது.

*ஸன்யாஸிகளை நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு: 1. குடீசகர், 2. பஹீதகர், 3. ஹம்ஸர், 4. பரமஹம்சர்*

***1. குடீசகர் :*** *கையில் திரிதண்டம், நீர் கமண்டலம், தூய்மையான பாதக்குறகு, தர்ப்பம், மான்தோல் ஆசனம், சிகை, பூணூல், காஷாய வஸ்திரம் ஆகியவற்றை தரித்துக் கொண்டு தனது கிராமத்தில் பந்துக்களின் வீடுகளில் மட்டும் பிக்ஷை எடுத்து உண்பவர்.* ***2. பஹீதகர் :*** *குடீசரைப் போன்றே அடையாளங்களைக் கொண்டு நல்லோர்கள் இல்லங்களில் பிக்ஷை எடுத்து உண்பவர்.* ***3. ஹம்ஸர் :*** *கையில் ஏகதண்டம், நீர் கமண்டலம், சிகை, பூணூல் தூய்மையான ஆசனம், பாதக்குறடு, காஷாயம் தரித்துக் கொண்டு கிராமத்தில் ஒருநாளும், நகரத்தில் ஐந்து நாட்களும், புண்ணிய தீர்த்தமுள்ள ஸ்தலங்களில் எட்டு நாட்களும், வஸித்து யோக்கியமுள்ள வீடுகளில் மட்டும் பிக்ஷை எடுத்து உண்பவர். இவர் எப்போதும் மனதில் பரமாத்மாவை தியானம் உள்ளவர். ஸன்யாஸிகள் காஷாயம் அணிவதின் நோக்கம் மனதில் உள்ள உலகப்பற்று என்கின்ற சிகப்பு நிற ஆசையை அகற்றியவர் என்பதின் அடையாளம்.* ***4. பரமஹம்சர் :*** *சிகை, பூணூல் நீங்கலாக ஏகதண்டம், நீர் கமண்டலம் ஆகியவற்றைக் கொண்டு கௌபீனம் மட்டும் கட்டிக் கொண்டு மரத்தினடியில் உள்ள குடிசை கிராமத்திலிருந்து தனித்துள்ள மடம், கோயில்கள் ஆகியவற்றில் தங்கிக் கொண்டு உள்ளங்கையிலே தூய்மையான பிக்ஷை எடுத்து உண்பவர். இத்தகையவர் ஹம்ஸர்களுள் சிறந்தவர்.*

*ஏக தண்டம், திரிதண்டம் தரிப்பது என்பது அடிப்படையில் ஒரே கருத்தைக் கொண்டதுதான். மனம், வாக்கு, காயம் ஆகிய முன்றையும் கட்டுப்படுத்தியவர் என்பதற்கு அத்தாட்சியாக முன்று கோல்களை இணைத்து ஏந்தியிருப்பார்கள். இவர்களை திரிதண்ட ஸன்யாஸி என்பர்.*

*மனம் கட்டுக்குள் இருந்துவிட்டால் வாக்கும், கோலும் தானாகவே கட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது என்ற கருத்தில் ஏகதண்டம் ஏந்தியிருப்போரை தண்டி ஸன்யாஸி என்பார்கள். தற்காலத்தில் மேலே குறிப்பிட்டப்படி ஸன்யாசிகள் காணப்படுவதில்லை என்ற காரணத்திற்காக அவர்களை ஸன்யாஸிகள் அல்ல என்று கருதிவிடக் கூடாது. இத்தகைய ஸன்யாஸிகள் மக்களின் பார்வையிலிருந்து விலகியே இருப்பார்கள். தற்போதுள்ள ஸன்யாஸிகள் மடாதிபதிகளாக இருக்கின்ற காரணத்தால் மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். ஸன்யாஸிகள் உலக நன்மைக்காக வாழ்பவர்கள். அவர்களை போற்றிப் பேணி காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, கடமை கிருஹஸ்தர்களுக்கு உள்ளது. இதனை உணர்ந்து மக்கள் செயல்பட நாடு சூபிட்சமாக இருக்கும்.*

# நான் சொல்வதின் நோக்கம்

*கைத் தொழில்கள் போய் ஆலைத் தொழில்களும், ஸமூஹம் சின்ன சின்னதாக வாழ்ந்த கிராம வாழ்க்கை போய் நகர வாழ்க்கையும் உண்டாகி, தேவைகளும் தொழில்களும் கணக்கில்லாமல் பெருகி, வாழ்முறையே சன்ன பின்னலாக ஆகிவிட்ட இப்பொழுது பழையபடி பாரம்பரியத் தொழிலையே ஏற்படுத்துவதென்பது அஸாத்யமாகத் தான் தோன்றுகிறது. க்ஷத்ரியர்கள்தான் மிலிடரியில் இருக்கலாம், வைசியர்தான் வியாபாரம் பண்ணலாம், நாலாம் வர்ணத்தார் தொழிலாளிகளாக உழைப்பது தவிர வேறே செய்யக்கூடாது என்றால் இப்போது நடக்கிற காரியமா? அப்படி நடத்தப் பண்ணுகிறது முடியக் கூடியதா? இந்தப் பிரத்யக்ஷ நிலைமை எனக்குத் தெரியாமலில்லை. பின்னே ஏன் வர்ண தர்மத்தை இப்படி நீட்டி முழக்கி ஸ்தோத்ரம் பண்ணுகிறேன் என்றால் இரண்டு காரணமுண்டு:*

*ஒன்று - இப்போது நாம் எப்படியிருந்தாலும் சரி, பழைய வழிக்கு நாம் போகவே முடியாவிட்டாலும் சரி, ''அந்த வழி ரொம்ப தப்பானது; அது சில* vested interest *-களால் (சுயநல கும்பல்களால்) தங்கள் ஸௌகரியத்துக்காகவே பக்ஷபாதமாக உண்டாக்கப்பட்ட அநீதியான முறை'' என்று இப்போது எல்லாரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, இப்படிச் சொல்வது சரியே இல்லை என்று உணர்த்துவது. அவனவனும் சித்த சுத்தி பெறவும், ஸமூஹம் கட்டுக்கோப்புடன் க்ஷேமத்தை அடையவும், கலாசாரம் வளரவும் தர்மத்தைப் போல் ஸஹாயமான ஸாதனம் எதுவுமில்லை என்று புரிந்து கொள்ள வைப்பது ஒரு காரணம்.*

*இதைவிட முக்கியமான இன்னொரு காரணம்; இப்போது க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர ஜாதிகளின் தொழில் முறை மாறிக் கலந்தாங்கட்டியாக ஆகியிருந்தாலுங்கூட, எப்படியோ ஒரு தினுசில் ராஜ்ய பரிபாலனம் - ராணுவ காரியம், பண்ட உற்பத்தி - வியாபாரம், தொழிலாளர் செய்ய வேண்டிய ஊழியங்கள் ஆகியவை நடந்து கொண்டுதான் இருக்கின்றன. முன் மாதிரிச் சீராயில்லாமல் போட்டியும் பொறாமையும் போராட்டமுமாக இருந்தாலும் இந்த மூன்று வர்ணங்களின் காரியங்கள் வர்ணதர்மம் சிதைந்த பின்னும் ஒரு விதத்தில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. தேசத்தின்* practical necessity*-யாக (நடைமுறைத் தேவைகளாக) அன்றாட வாழ்வுக்கும் ராஜாங்கம் நடத்துவதற்கும் இந்தக் காரியங்கள் நடந்தே ஆகவேண்டியிருப்பதால், கோணாமாணா என்றாவது நடந்து விடுகின்றன. ஆனால் இவற்றுக்கெல்லாம் பூர்த்தியை உண்டாக்குவதான பிராம்மண வர்ணத்தின் காரியம் மட்டும் அடியோடு எடுபட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. ஸகல காரியங்களுக்கும்*

ஆதாரமாக இருக்கிற தர்மங்களை எடுத்துச் சொல்லியும் வாழ்ந்து காட்டியும் பிரசாரப்படுத்துவது, வேதங்களைக் கொண்டு தேவ சக்திகளை லோகக்ஷேமார்த்தமாக அநுக்கிரஹம் பண்ணவைப்பது, தங்களுடைய எளிய தியாக வாழ்க்கையால் பிறருக்கும் உயரந்த லட்சியங்களை ஏற்படுத்துவது, ஸமூஹத்தின் ஆத்மிக அபிவிருத்தியை உண்டாக்குவது, கலைகளை வளர்ப்பது - என்பதான பிராம்மண தர்மம் போயே போய்விடுகிற ஸ்திதியில் இருக்கிறோம். இது ஸூக்ஷ்மமானதால், practical necessity என்று எவருக்கும் தெரியவில்லை. மற்ற மூன்று வர்ணங்களின் தொழில் நடக்காவிட்டால் நமக்கு வாழ்க்கை நடத்துவதற்கே முடியாது என்பதுபோல இது தோன்றவில்லை. ஆனால் வாஸ்தவத்தில் வாழ்க்கைக்கு அர்த்தம் தந்து அது நிறைவான வாழ்க்கையாவதற்கு வழி செய்வது இதுதான். இதை விட்டு விட்டு மற்றவற்றில் மட்டும் கவனம் வைக்கிறோம். அவற்றில் உயர்வை அடைந்தால் prosperity, prosperity (ஸுபிக்ஷம்) என்று பூரித்துப் போகிறோம். ஆனால் ஆத்மாபிவிருத்தியும், கலாசார உயர்வுமில்லாமல் லௌகிகமாக மட்டும் உயர்ந்து என்ன பிரயோஜனம்? இந்த உயர்வு உயர்வே இல்லை என்று அமெரிக்கர்களுக்கு இப்போது ஞானம் வந்திருக்கிற மாதிரி நமக்கும் ஒரு நாள் வரத்தான் செய்யும். அதனால், மற்ற ஜாதிக் குழப்பங்கள் எப்படியானாலும், தேசத்தின் ஆத்மாவைக் காப்பாற்றிக் கொடுக்க பிராம்மண ஜாதி ஒன்று மட்டுமாவது, ஒழுங்காக ஸகல ஜனங்களுக்கும் வழிகாட்டிகளாக இருந்து கொண்டு, எளிமையாக, தியாகமாக வாழ்ந்து கொண்டு, வைதிக கர்மாக்களைச் செய்து லோகத்தின் லௌகிக-ஆத்மிக க்ஷேமங்களை உண்டு பண்ணிக் கொண்டு இருக்கும்படியாக செய்யவேண்டும். இந்த ஒரு ஜாதியை நேர்படுத்திவிட்டாலே மற்ற ஜாதிகளில் ஏற்பட்டிருக்கிற குழப்பங்களும் தீர ஆரம்பித்துவிடும். எந்த தேசத்திலும் இல்லாமல் தர்ம ரக்ஷணத்துக்கென்றே, ஆத்மாபிவிருத்திக்கென்றே யுகாந்தரமாக ஒரு ஜாதி உட்கார்ந்திருந்த இந்த தேசத்தில் அது எடுபட்டுப் போய் ஸகலருக்கும் க்ஷீணம் உண்டாக விடக்கூடாது என்று, இந்த ஒரு ஜாதியை உயிர்பித்துக் கொடுப்பதற்காகத்தான் இவ்வளவும் முக்யமாகச் சொல்கிறேன். தங்களுக்கு உசத்தி கொண்டாடிக் கொண்டு, ஸௌகர்யங்களை ஏற்படுத்திக் கொண்டு, ஹாய்யாக இருக்கிறதல்ல நான் சொல்கிற பிராம்மண ஜாதி, ஸமூஹ க்ஷேமத்துக்காக அநுஷ்டானங்களை நாள் பூரா பண்ணிக் கொண்டு, எல்லாரிடமும் நிறைந்த அன்போடு, பரம எளிமையாக இருக்க வேண்டியதே இந்த ஜாதி. இதை குல தர்மப்படி இருக்கப் பண்ணிவிட்டால் நம் ஸமூஹமே தர்ம வழியில் திரும்பிப் பிழைத்துப் போய்விடும் என்கிற உத்தேசத்தில் தான் இத்தனையும் சொல்வது.

--தெய்வத்தின் குரல் இரண்டாம் பகுதி

## சமுதாய பார்வை:

# நவீன சமுதாயத்தின் குறைபாடுகளும் தீர்வும்

ஸத்ய நாராயணன்

கல்வி, தொழிற்சாலை, விஞ்ஞானம், அறிவியல் போன்ற பல்வேறு துறைகளில் இன்றைய நவீன சமுதாயம் வளர்ச்சியடைந்து விட்டதாக அறிகிறோம். இந்த வளர்ச்சி நல்ல மாற்றமா? இதனால் மனிதனும் இதர ஜீவராசிகளும் நல்ல பலனை அடைந்துள்ளார்களா? இதைப் பற்றிய ஒரு பார்வையை இப்போது காண்போம்.

**நவீன சமுதாயம் :**

நாம் வாழும் பாரத நாட்டில், அதன் இயல்பான பாரம்பரியத்தை அதாவது ஆன்மீக கலாசாரத்தை விட்டு நாம் கொஞ்சம் கொஞ்சமாக மேற்கத்திய கலாசாரத்திற்கு இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறோம். இந்தியாவில் வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் படிப்படியாக நம்மை அடிமைப்படுத்த தொடங்கினர். பாரதத்தின் ஆன்மீக கலாசாரத்தை தகர்த்தால் மட்டுமே இப்பூமியின் மக்களை அடிமைப்படுத்துவது சாத்தியம் என்று கருதினர். சிறிது சிறிதாக அவர்களுடைய கல்வி மற்றும் கலாசாரத்தை நம்மீது திணித்தனர். வேறு வழியின்றி பாரத மக்களும் அதனைக் கடைபிடிக்க தொடங்கினர். ஆனால் இதில் வேடிக்கை என்னவெனில், இந்தியா சுதந்திரம் பெற்று ஆங்கிலேயர்கள் இங்கிருந்து சென்றுவிட்டாலும், அவர்கள் கற்றுக் கொடுத்த மேற்கத்திய கலாசாரமும் கல்வி முறையும் மேன்மேலும் வளர்ச்சி பெற்று, உண்மையான வேத கலாசாரத்தை இன்று நாம் ஏறக்குறைய இழந்து நிற்கின்றோம்.

**கல்விமுறையின் குறைபாடுகள் :**

அந்நியர்களின் கல்வி முறையைப் பின்பற்றுவதால், இன்று நாம் பாரதத்தின் பாரம்பரிய கல்வி முறையை புறக்கணிக்கின்றோம். இந்த பௌதிக கல்வி முறையானது நம்மை ஆன்மீக கலாசாரத்திலிருந்து விலகச் செய்கிறது. எவ்வாறு பணம் சம்மாதிப்பது, எவ்வாறு அதிகமான புலனின்பங்களை அனுபவிப்பது போன்றவற்றை மட்டுமே அடிப்படையாக வைத்து இன்றைய கல்விமுறை உள்ளது. உடலில் உள்ள ஆத்மாவைப் பற்றிய கல்வி உங்கள் நாட்டில் சொல்லி தரப்படுகிறதா என்றால் அது முற்றிலும் கேள்விக்குறியே. உலகம் முழுவதும் எத்தனையோ பல்கலைக்கழகங்கள் உள்ளபோதிலும், ஆத்மா சம்மந்தபட்ட கல்வி எங்குமே இல்லாதது நிச்சயம் மிகப்பெரிய

குறைபாடே. இன்றைய பெற்றோர்கள் தங்களுடைய மகன்களும் மகள்களும் மிகப்பெரிய மருத்துவராக, பொறியியல் வல்லுநராக, அல்லது மிகப்பெரிய விஞ்ஞானியாக ஆகவேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர, வாழ்வின் மாபெரும் துன்பங்களான பிறப்பு, இறப்பு, முதுமை, மற்றும் நோயிலிருந்து விடுபடுவதைப் பற்றி குழந்தைகள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வம் செலுத்துவதில்லை. இவ்வளவு ஏன், அவர்களே அதைப் பற்றி நினைப்பதில்லை. தன் மகனை சான்றோன் (ஆன்மீக அறிவில் தேர்ச்சி பெற்றவன்) என்று கேட்டு மகிழ்ந்த தாய்மார்களின் காலம் கடந்து விட்டதோ!

அரசியல் தலைவர்களும் மக்களைத் தவறாக வழி நடத்துவதில் மிகவும் திறமை மிக்கவர்களாக இருக்கின்றனர். அனைவரும் கல்வி பெற வேண்டும் என்று குரல் கொடுத்து, கல்வித் துறையை அவர்கள் நல்ல வியாபாரமாக்கி விட்டதை நாம் கண்கூடாக காண்கிறோம். அனைவருக்கும் கல்வி கொடுப்பதால், அனைவருக்கும் நல்ல வேலை கிடைத்ததா என்றால், அதுவும் இல்லை. எத்தனையோ படித்த இளைஞர்கள் வேலையின்றி அலைகழிக்கப்படுவதைக் காண்கிறோம். மாணவர்கள் ஆசிரியர்களைக் கொலை செய்வது, மிரட்டுவது, ஆசிரியர்கள் மாணவிகளைப் பாலியல் தொந்திரவு செய்வது போன்றவற்றை ஊடகங்கள் வாயிலாக காண்கிறோம். நவீன கால கல்வி முறையின் பிரதிபலிப்பே இது.

இன்றைய பல்கலைக் கழகங்களில் எவ்வளவோ துறைகள் உள்ளபோதிலும் ஆத்ம விஞ்ஞானத்தை அறிவதற்கு எந்தவொரு துறையும் இல்லை.

**தொழில்நுட்பத்தின் குறைபாடுகள் :**

அடுத்ததாக, இன்றைய நவீன சமுதாயத்தின் வளர்ச்சியாக கருதப்படும் தொலைக்காட்சி, இணையம் (இன்டர்நெட்), செய்தித்தாள்கள், செல்போன் போன்றவை நம்மை மேலும் ஆன்மீகத்திலிருந்து விலக்குவதற்கு வழி செய்கின்றன. இவை மக்களின் புலன்களைத் தூண்டிவிட்டு புலனின்பத்தை அதிகரிக்கச் செய்து புலன்களை மாசடையச் செய்கின்றன. ஆண் பெண் இனக் கவர்ச்சி என்பது திருமணம் முடிந்தபின்னர் என்ற நிலை மாறி, இன்று அதனை தொலைக்காட்சியிலும் இணையத்திலும் மாபெரும் வியாபார பொருளாக மாற்றி, திருமணம் என்னும் புனிதமான சடங்கினை கொச்சைப்படுத்திவிட்டனர். சினிமா துறை இதில் பெரும் பங்கு வகிக்கிறது. பல்வேறு ஊடகங்களின் காரணத்தினால் மனிதர்கள் தங்களுடைய உணர்வுகளை பரிமாறிக் கொள்வது மிகவும் குறைந்து விட்டது. இளைய சமுதாயத்தினர் இணையத்தின் தவறான

விஷயங்களால் கவரப்பட்டு, தங்களது அரிதான மனித வாழ்க்கையை தவறாக உபயோகிக்கின்றனர்.

**ஒழுக்கமின்மை :**

நவீன சமுதாயத்தின் மற்றொரு மிகப்பெரிய வளர்ச்சி, மக்கள் ஒழுக்கமின்றி இருத்தல். தவறான பாலுறவு, மாமிச உணவு, போதை வஸ்துக்கள், சூதாட்டம் ஆகிய நான்கு ஒழுக்கமற்ற செயல்களில் மக்கள் அனைவரும் மிகவும் சுலபமாக ஈடுபடுகின்றனர். இதனால் தூய்மை, வாய்மை, தயை, தவம் போன்ற ஒழுக்கச் செயல்கள் முற்றிலுமாக தகர்க்கப்பட்டுவிடுகின்றன. ஒழுக்கமற்ற செயல்களைத் தடை செய்வதற்கு அரசியல் தலைவர்களும் முன்வருவதில்லை. அவற்றை எவ்வாறு அதிகப்படுத்துவது என்றே செயல்படுகின்றனர். கலி யுகத்தில் தலைவர்கள் தங்களின் சுய இலாபத்திற்காக மக்களை ஏமாற்றுபவர்களாக இருப்பர் என்று ஸ்ரீமத் பாகவதம் பன்னிரண்டாம் காண்டத்தில் கூறப்பட்டிருப்பதை இன்று நாம் நேரில் கண்டு வருகிறோம்.

நவீன சமுதாயத்திலுள்ள பெண்கள் மிகவும் சுதந்திரமாக வலம் வருவதை நாகரிகமாக கருதுகின்றனர். பாரத பாரம்பரியத்தின்படி, பெண்கள் தங்களது சிறுவயதில் தந்தையின் பாதுகாப்பிலும் திருமணம் முடிந்ததும் கணவனின் பாதுகாப்பிலும் வயதான பின்னர் மகனின் பாதுகாப்பிலும் இருக்க வேண்டும். அத்தகு கட்டுப்பாடும் ஒழுக்கமும் நவீன சமுதாயத்தில் இல்லாத காரணத்தினால், பல்வேறு தகாத உறவுகள் வளர்ந்து வருகின்றன. கொடூர மனம் கொண்ட மனிதர்கள் மாமிச உணவை விரும்புகின்றனர்; அதிலும் சிலர் தாய்க்கு சமமாக மதிக்கப்பட வேண்டிய பசுவைக் கொன்று உண்கின்றனர். பசுவின் பாலை நாம் அருந்துகிறோம், பால் நின்றவுடன் அவளை கசாப்புக் கூடகங்களுக்கு அனுப்புகின்றனர். இஃது எந்த விதத்தில் நியாயம்? பல்வேறு வழிகளில் மக்கள் ஆன்மீக கலாசாரத்தை விட்டு விலகியுள்ளதால், அதிக அளவு வெப்பம், தண்ணீர் பற்றாக்குறை, உணவு பற்றாக்குறை, இயற்கைச் சீற்றம், கொரோனா போன்ற கொடிய நோய்களினால் மனிதன் சிக்கிக் கொண்டுள்ளான்.

மாமிச உணவு, மது, தகாத பாலுறவு போன்ற தீய செயல்கள் நவீன சமுதாயத்தின் அங்கங்களாக மாறி வருகின்றன.

**விஞ்ஞானிகளின் குறைகள் :**

மற்றுமொரு மாபெரும் ஏமாற்று வேலை என்னவெனில், இன்றைய விஞ்ஞானிகள். அணுகுண்டுகளையும் போர்க் கருவிகளையும் உருவாக்கி அவர்கள் மக்களுக்கு

அழிவைத் தேடித் தருகின்றனர். நிலவிற்குச் சென்று மண் கொண்டு வருகிறேன் என்று கூறி, ஆராய்ச்சி என்ற பெயரில் மக்களின் பணத்தைக் கோடிக்கணக்கில் செலவிடுகிறார்கள். ஒரு விஞ்ஞானியின் கருத்தை மற்றொரு விஞ்ஞானி முறியடித்து, பொது மக்களை பைத்தியமாக்குகின்றனர். விஞ்ஞானம் என்ற பெயரில் ஏமாற்று வேலை மட்டுமே நடக்கிறது. விமானம், ஒலிப்பெருக்கி, மின்சாரம் போன்ற விஞ்ஞானிகளின் சில படைப்புகள் ஆன்மீக விஷயங்களில் ஈடுபடுத்தப்படலாம். அவ்வாறு நாம் அவற்றை பகவானின் சேவைக்காக ஈடுபடுத்தாவிடில், அவை அனைத்தும் பயனற்றவையே. நவீன சமுதாயத்தின் குறைபாடுகளை முழுமையாக பட்டியலிட்டால், அது மாபெரும் புத்தகமாகவே வந்துவிடும்.

**இதற்கான தீர்வு :**

ஆன்மீக கலாசாரத்தை மக்களிடம் மீண்டும் ஸ்தாபிதம் செய்து, வேத கால நாகரிகத்தை ஏற்படுத்துவதே இன்றைய சமுதாய பிரச்சனைகள் அனைத்திற்கும் ஒரே தீர்வாகும். ஆன்மீக பண்பாட்டை வளர்ப்பதற்கு ஒவ்வொரு யுகத்திலும் வெவ்வேறு வழிமுறைகள் சாஸ்திரங்களில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. முதல் யுகமான ஸத்ய (கிருத) யுகத்தில் பகவான் ஹரியை தியானித்து என்ன பலன்களை பெற்றார்களோ, திரேதா யுகத்தில் யாகங்கள் செய்து என்ன பலன்களை அடைந்தார்களோ, துவாபர யுகத்தில் விக்ரஹ வழிபாடுகளால் என்ன பலன்களைப் பெற்றார்களோ, அந்த பலன்கள் அனைத்தையும் நாம் வாழும் கலி யுகத்தில் ஹரி நாம ஸங்கீர்த்தனத்தினால் மட்டுமே பெற்றுவிட முடியும் என்று ஸ்ரீமத் பாகவதம் (12.3.52) உறுதியாக கூறுகிறது.

பசுவதை தடைச் சட்டம், மது ஒழிப்புச் சட்டம், சூதாட்ட தடைச் சட்டம், விபச்சார விடுதிகளை மூடுதல் போன்றவை அமலுக்கு வர வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சிறந்த ஆன்மீக வாதிகளாக இருக்க வேண்டும். அவர்கள் பகவானின் மீது அளவற்ற பக்தி உடையவராக இருத்தல் வேண்டும். நம் பாரத நாட்டில் பரீக்ஷித் மகாராஜா காலம் வரையில் அனைத்து அரசர்களும் மிகச் சிறந்த பக்திமான்களாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய குருவின் சொற்படி நாட்டை ஆண்டபோது மக்கள் மிகவும் மகிழச்சியுடையவர்களாக இருந்தனர்.

மனித வாழ்க்கை என்னும் அரிய வாய்ப்பினை பகவானுக்கும் ஆச்சாரியர்களுக்கும் பக்தித் தொண்டு செய்வதற்கும் ஆன்மீக உலகை அடைவதற்கும் பயன்படுத்த வேண்டுமே தவிர, இதுபோன்ற போலியான சமுதாயத்தை உருவாக்குவதற்குப்

பயன்படுத்தக் கூடாது. நிதான புத்தி உடைய ஒவ்வொருவரும் சற்று யோசித்து பார்க்க வேண்டும்: இன்றைய நவீன சமுதாயத்தின் வளர்ச்சி நமக்கு திருப்தியளிக்கிறதா? நிச்சயம் இல்லை. ஆனால் யாரும் அதனை யோசிப்பதில்லை, மாயை அதற்கு தடையாக உள்ளது. அந்த தடையை விலக்கி ஆன்மீகப் பாதையினை ஏற்று, ஒவ்வொருவரும் தன்னுடைய முன்னோர்கள் கடைபிடித்த ஆன்மீக வழிமுறையை தானும் பின்பற்றி தன்னுடைய சந்ததியினரும் பின்பற்ற வழிவகை செய்ய வேண்டும்.

எப்படி பார்த்தாலும் இன்றைய நவீன சமுதாய வளர்ச்சியானது நம்முடைய வாழ்க்கை முறையினை மிகவும் கடுமையாக மாற்றியுள்ளது என்றால் அது மிகையாகாது. கடந்த சில மாதங்களாக உலகம் முழுவதும் கண்ணுக்குத் தெரியாத கிருமியினால் பாதிப்பை நாம் கண்கூடாக பார்த்தோம். அத்யாத்மிகா, அதிபௌதிக, அதிதெய்விக (புலன்கள் மற்றும் மனதால் எழும் துன்பங்கள், பிற உயிரினங்களினால் ஏற்படும் துன்பங்கள், தேவர்களினால் ஏற்படும் துன்பங்கள்) என்னும் 3 பாதிப்புகளிலிருந்து நாம் என்றுமே தப்பிக்க இயலாது.

தெய்வத்தின் குரல், பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம், இராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகியவற்றை கல்வி பாடதிட்டங்களில் சேர்த்து அவற்றை சிறுவயது முதல் மாணவர்கள் படித்து ஒழுக்க சீலர்களாக வலம் வர வேண்டும். இந்த புத்தகங்களின் அடிப்படையில் உலகெங்கிலும் பிரச்சாரம் செய்த சூழலில், உலகின் பௌதிக பிரச்சனைகளுக்கும் இதுவே தீர்வு என்பதை பல ஆச்சாரியர்கள் வலியுறுத்தியுள்ளனர் நிரூபித்தும் உள்ளனர். சுமார் முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் இவ்வளவு துன்பம் உள்ளவர்களாக இருந்ததில்லை, காரணம் அவர்கள் தம்முடைய வாழ்வில் ஆன்மீக கலாசாரத்தோடு இணைந்து வாழ்ந்ததே. நவீன சமுதாயம் ஆன்மீகத்தை அறவே ஒதுக்கக்கூடியதாக உள்ளது.

ஆன்மீகப் பாதையினை ஏற்று ஆச்சாரிய சீலர்களின் அறிவுரைகளின் படி நம்முடைய வாழ்க்கை நெறியினை ஏற்போம். நவீன நாகரீக முன்னேற்றம் என்பது மொத்த உலகத்திற்கும் அழிவு பாதையே அன்றி வேறல்ல. ஆயினும் அத்தகைய முன்னேற்றத்தினை ஆன்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்தி அதனை நல் வழியில் திசை திருப்ப முடியும்.

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

## பர்பரீகனும் க்ருஷ்ணனும்

பௌராணிகர் புதுக்கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

முன்னொரு காலத்தில் ஒரு யக்ஷன் - தேவர்கள், கின்னரர்கள், காந்தர்வர்கள் அப்சரசுகளுடன் விஷ்ணு லோகத்தில் இருந்தான். எப்போதெல்லாம் அரக்கர்களால் தேவர்களுக்குத் துன்பம் நேரிடுகிறதோ அப்போது அனைவரும் விஷ்ணுவிடம் முறையிடுவது வழக்கம். யக்ஷனின் போறாத வேளை அவனுக்கு இது பிடிக்கவில்லை. ''ஏதற்காக விஷ்ணுவை நாடிப்போகவேண்டும் நானே இவர்களை அடித்துத் துரத்துவேன் போரில் மாய்ப்பேன்'' என்று மமதையில் அலறினான். இது கண்ட ப்ரம்மா இவன் செருக்கை அடக்கவும் பாடம் புகட்டவும் நினைத்தார். ''இவன் தன் யக்ஷஸ்வரூபத்தைத் துறந்து மானிடனாகப் பிறந்து விஷ்ணுவின் கையாலேயே மடியக் கடவது''என்ற சாபத்தை மொழிந்தார்.

காலம் கடந்து கனிந்தது. ப்ரம்மாவின் சாபத்திற்கு இணங்க யட்ஷன் பர்பரீகன் எனும் பெயருடன் கடோத்கசன் மௌரவியின் பிள்ளையாக பிறந்தான். அவன் வளர வளர யக்ஷனின் குணங்கள் அவனைவிட்டு நீங்கவில்லை. எப்போதும் ஆர்பாட்டம் எல்லாரோடும் சண்டை, கோஷம் இதுவே அவன் தொழில்.

இத்தருணத்தில்தான் க்ருஷ்ணர் பூலோகத்தில் அவதரித்தார். அவனுடைய முடிவு தெரிந்த க்ருஷ்ணர் அவனிடம் தேவியைக்குறித்துத் தவம்செய்து அவள் அருளை பெற கட்டளையிட்டார். அவனும் விஜயன் என்னும் ப்ராம்மணனின் உதவியுடன் கடுமையான தவம் மேற்கொண்டான். தேவியும் ப்ரஸன்னமாகி'' உன் தவம் ஈடேறும்.

நான் தரும் இந்தவிபூதியை வாங்கிகொள். இதை யார்மீது போட்டாலும் அது உடலில் விழும் இடத்தில்தான் மரணம் சம்பவிக்கும்'' என்று கூறி விபூதியையும் கொடுத்தருளினாள். வழக்கம்போலவே தன் ஆர்பாட்டத்தை நிறுத்தாத பர்பரீகன் தான் யார்மீது மோதுகிறோம் என்றறியாமலே பீமனோடு மோதி அவமானப்பட்டான். அவர் தன் பாட்டன் என்றறிந்ததும் தன் செயலுக்கு வெட்கப்பட்டு தற்கொலை செய்துகொள்ள எத்தனித்தான். அப்போது தேவி ப்ரஸன்னமாகி அவனைத் தடுத்து விஷ்ணுவால் தான்

உனக்கு முக்தி அதுவரை காத்திரு என்றாள். அதற்குரிய காலமும் பாரதயுத்தம் எனும்பெயரில் வந்தது. அவன் பாண்டவர்கள் தரப்பில் மிக வீரமாகப்போரிட்டான். ஒரு சமயம் போரில் கிட்டத்தட்ட அவன் உயிர் போகும் தருணம் ஏற்பட்டது. உடனே அவன் விபூதியை கௌரவர்கள் மீது வீசினான். அப்போது சண்டமாருதம் அடிக்க கௌரவர்கள்மீது விழுந்தது. சில துகள்கள் அவன் கழுத்திலும் விழுந்தது. விபூதியை இம்மாதிரி வீணாக்குவதைக் கண்ட க்ருஷ்ணர் ரதத்திலிருந்து இறங்கி சில துகள்களை தன் காலினால் அழுத்தினார். மிகவும் கோபம் கொண்ட அவர் பர்பரீகனின் தலையைதன் சுதர்சன சக்ரத்தால் அறுத்தார்.

பல வருடங்களுக்குப் பிறகு பாண்டவர்கள் ஆட்சி நலமுடன் நடப்பதைக் கண்டு சந்தோஷித்து தன்அவதார வேலை முடிந்தது என்று நினைத்து ப்ரபாஸ நதிக்கரையில் ஓய்வெடுக்க எண்ணி ஒரு மரத்தின் கீழ்படுத்தார். மிருகம் என்று எண்ணிய ஒரு வேடன் அம்பால் அவர் காலை அடிக்க அவரும் விண்ணுலகம் ஏகினார். எக்காலால் அவர் விபூதி துகள்களை அழுத்தினாரோ அக்கால் வழியாகத்தான் அம்பு பாய்ந்தது. க்ருஷ்ணரையும் அது விடவில்லை.

(ஸ்காந்த புராணம்)

## *ரிக் வேதத்தில் கூறப்பட்டுள்ள சில நல்ல கருத்துக்கள்*

***ருக் 1,90,6***

*17. உண்மையும் நேர்மையும் ஆனவருக்கு காற்று சுகத்தையும் நதிகள் சுவையான நீரையும் அளிக்கின்றன.*

***ருக்-5,12,5***

*18. தூய்மையானவர்களைத் தூற்றுவோர் அழிந்து போவார்கள்.*

***ருக்,1-15,5***

*19. சுபீக்ஷத்தை அளிக்கும் ஸ்வராஜ்யத்தினை வணங்குவோம்.*

***ருக்1,89,4***

*20. இந்த பூமியும் ஆகாயமும் நமது தாயும் தந்தையும்.*

# மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

सहितमहाहव मल्लतमल्लिक मल्लतमल्लिक मल्लरते
विरचितवल्लिक पल्लिकमल्लिक जिल्लिकभिल्लिक वर्गव्रुते ।
शितक्रुतपुल्ल समुल्लसितारुण तल्लजपल्लव सल्ललिते
जय जय हे महिषाशुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। ९।।

**ஸஹிதஸஹாஹவ மல்லதமல்லிக மல்லதமல்லிக மல்லரதே**
**விரசிதவல்லிக பல்லிகமல்லிக மல்லிகபில்லிக வர்கவ்ருதே ।**
**ஸிதக்ருதபுல்ல ஸமுல்லஸிதாருண தல்லஜபல்லவ ஸல்லலிதே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே ॥ 11 ॥**

*மற்போரில் பல்வேறு திறமைகள் காட்டுகின்ற மாமல்லர்களுடன் மற்போர் செய்வதை விரும்புபவளே, மல்லிகை, முல்லை, பிச்சி போன்ற பல்வேறு மலர்களை சூடிய பெண்களால் சூழப்பட்டவளே தளிரின் இளம் சிவப்பும், வெட்கப்படுகின்ற சிவப்பு நிறம் கொண்டவளே மஹிஷாஸுரனை அழித்தவளே அழகிய பின்னிய கூந்தலை உடையவளே ஜய ஜய என்று உன்னை போற்றுகிறேன்.*

अविरलगण्ट् गलन्मदमेदुर मतमतन्गजराजपते य
त्रिभिवन् भूषण भूतकलानिधि रूपपयोनिधि राजसुते ।
अयि सुदथीजन लालसमानस मोहनमन्मथ राजसुते
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। १० ।।

**அவிரலகண்ட கலன்மதமேதுர மத்தமதங்க ராஜபதே**
**த்ரிபுவன பூஷண பூதகலானிதி ரூபபயோனிதி ராஜஸுதே ।**
**அயிஸுததீஜன லாலஸ மானஸ மோஹன மன்மத ராஜஸுதே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே ॥ 12 ॥**

*ஓயாமல் மத நீரைப் பெருக்குகின்ற யானையின் இன்ப நடையை ஒத்த நடை உடையவளே மூன்று உலகுக்கும் ஆபரணமான நிலவை ஒத்தவளே பாற்கடலாகிய அரசனுக்குப் பிறந்தவளே, அழகிய பெண்களின் மனத்தில் கூட மோகத்தையும், ஆசையையும் தூண்டுகின்ற அழகு வாய்ந்த இளவரசியே, மஹிஷாஸுரனை அழித்தவளே, அழகிய பின்னிய கூந்தலை உடையவளே, மலைமகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

# ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி

*108 அத்வைத வாசகங்கள்*

*பி. ஆர் கண்ணன், மும்பை*

स चात्मभूत: सर्वस्य (केनोपनिषत् भाष्यम) । 59

**ஸ சாத்மபூ: ஸர்வஸ்ய**

*அவனே எல்லா உள்ளத்திலும் இருக்கும் ஆத்மாவாகும்.*

ईस्वरात् भिन्नलक्षणा: आत्मनो न सन्ति । 60

**ஈஸ்வராத் பின்னலக்ஷணா: ஆத்மனோ ந ஸந்தி**

*ஈஸ்வரனின் பின்னாமான லக்ஷணங்கள் ஆத்மனிடத்தில் இல்லை.*

अविद्द्याव्दुपलभ्यत्वाच्च भेदस्य तत्क्षये अनुपपतिरिति सिद्द्येकत्वम् (केनोपनिषत् भाष्यम्) 61

**அவித்யாவத் உப்லப்யத்வாச்ச பேதஸ்ய தத்ட்ஷணே அனுபபத்திரிதி (ஸித்தமேகத்வம்)**

*அறியாமையால் பேதம் பார்க்கப்படும். அவித்யை ஓட பேதம் மறையும். எல்லாருள்ளும் இருக்கும் ஆத்மன் ப்ரம்மம் என்பது உணரப்படும்.*

ग्यानस्य ह्येषा परा निष्टा यदात्मैकत्वविग्यानम् (कटभाष्यम्)। 62

**ஞ்யானஸ்ய ஹி ஏஷா பரா நிஷ்டா யதாத்மைகத்வ விஞ்யானம்.**

*எல்லா ஜீவன்களிலும் உள்ள ஆத்மனை உணர்வதே அறிவின் கொடு முடியாகும்.*

परमार्थ्तो अनुपाह्दिक्रुतम् च त्वभेकभेव अद्वितीयमुपादेयम् । 63

**பரமார்ததோ அனுபாதிக்ருதம் ச தத்வமேகமேவ அத்விதீயம் உபாதேயம்.**

*இரண்டில்லாததும் உபாதிகளற்றதுமான ஏக வஸ்துவை காண்பதே பரமார்த்திகம்.*

न य कर्तुर्त्वम् भोक्त्रुत्वम् वा क्रियाकारकफ्लम् वा स्यात् । 64

**ந ச கர்த்ருவத்வம் போக்த்ருத்வம் வா க்ரியாகாரபலம் வா ஸ்யாத்.**

*அந்த நிலையில் செய்பவனுமில்லை,அனுபவிப்பவனுமில்லை க்ரியைக்குப் பலதாதாவுமில்லை. (ப்ரஸ்ன பாஷ்யம்)*

सर्वस्य प्रत्यग्यात्मवात् अवगतिरेव गतिरुच्यते । 65

**ஸர்வஸ்ய ப்ரத்யாகாத்மவாத் அவகதிரேவ கதிருச்யதே (கட பாஷ்யம்)**

*ஆத்மனே எல்லா ஜீவங்களிலும் இருப்பதால் அதைக்காண்பதே ஒருவனின் லக்ஷ்யம் (கட பாஷ்யம்)*

सर्वव्याप्येक एवात्मा जगत: । 66 (कट भाष्यम्)

**ஸர்வவ்யாப்யேக ஏவாத்மா ஜகத:**

*இப்பரந்த உலகம் முழுதும் ஆத்மனே நிரம்பியுள்ளது.*

तस्य च याथात्म्यम् अत्यन्त विशुद्द्मत्वैतम् । 67

**தஸ்ய ச யாதாத்ம்யம் அத்யந்த விசுத்தமத்வைதம்.**

*இந்த உலகம் அத்யந்தமான ஸுத்தமான அத்வைதமே.*

*(தொடரும்)*

**வைதிக முறைகள் வளர உபகாரம் :**

*தெய்வத்தின் குரல் (மூன்றாம் பகுதி)*

*கல்யாணம், உபநயனம் முதலியவற்றில் குறைவில்லாமல் தக்ஷிணை தருவது மட்டுமின்றிப் பொதுவாகவே வைதிகர்களுக்கு உபகாரம் செய்கிற எண்ணம் வளர வேண்டும். இது இல்லாததால்தான் அடுத்த தலைமுறைக்கு வைதிக கார்யம் செய்து வைக்கவே ஆள் கிடைக்காத மாதிரிச் செய்திருக்கிறோம். வேத ஸம்பந்தமான கார்யங்கள் லோகத்தில் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது இருந்து கொண்டிருக்கும்படி பண்ணுவதைவிட ஜன ஸமூஹத்துக்குப் பெரிய பரோபகாரம் எதுவும் இல்லை. இப்போது விநோபா 'பூதான்' என்று சொல்வதற்கு முன்னோடி பழைய காலத்தில் ராஜாக்களும், பிரபுக்களும் வேத வித்துக்களுக்கு நிலம் மானியம் பண்ணினதுதான்.*

*பரம தரித்ரர்களும் சாஸ்தரப் பிரகாரம் சுபாசுபங்களைச் செய்ய நாம் உபகரிக்க வேண்டும். 'ஷோ' இல்லாமல் சாஸ்த்ரப்படி மட்டும் செய்வதற்கு நிறையச் செலவே இராது. என் பரோபகார லிஸ்ட் நீண்டுக்கொண்டே வருகிறது. அதிலே ஒவ்வொரு 'லொகாலிடி'யிலும் பரம ஏழைகளும் சொற்ப வாடகையில் பெறுமாறு ஒரு கல்யாண மண்டபம், ஒரு அபர காரிய ஸ்தலம் ங்உத்ர க்ரியைகள் செய்யுமிடம்சி ஏற்படுத்துவதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.*

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

*பருப்பொருள்களின் இயல்பு*

***பௌத்தர்கள் கூற்று***

**பௌத்தஸ்து'அன்யோந்தராத்மா விக்யானமய:'இத்யாதி ஸ்ருதே:**

**கர்துரபாவே கரணஸ்ய சக்த்யபாவாதஹும் கர்தாஹும் போக்த்யானு**

**பவாச்ச புத்திராத்மேதி வததி 128**

*இதைத் தவிர விக்யானமயனான ஆத்மா என்னும் ஸ்ருதியை ஆதாரமகக் கொண்டு புத்தியே ஆத்மா என்பர். மேலும் புத்தி இல்லாதிருக்க எதுவும் நடக்காது, அதனாலேயே நானே கர்தா நானே போக்தா என்கிறான் என்பர்.*

***மீமாஸ்கர்களின் கருத்து***

**ப்ரபாகர தார்கிகௌ து அன்யோந்தர ஆத்மா ஆனந்தமய:''இத்யாதி**

**ஸ்ருதே:புத்த்யாதீனாம் அஞ்யானே லயதர்சனாத் அஹும் அஞ்யோ**

**அஹும் அஞ்யானி இத்யாதி அனுபவாச்ச அஞ்யானமாத்மேதி வதத: 129**

*இதையும் தாண்டி ஆனன்தமயமாத்மா உள்ளது என்பதை ஆதாரமாகக் கொண்டு அஞ்யானம் தான் ஆத்மா என்பர். மேலும் ஆழ்ந்த தூக்கத்தில் அஞ்யானத்தில் ஆழ்ந்து விழித்தவுடன்''நான் அறியேன்'' ''எனக்கு ஞ்யானமில்லை'' என்று கூறுவதிலிருந்தும் அறியலாம் என்பர்.*

***பாட்ட மீமாம்ஸகர்களின் கருத்து***

**பாட்டஸ்து ''ப்ரஞ்யானகன ஏவ ஆனந்தமய:''இத்யாதி ஸ்ருதே:**

**ஸுஷுப்தௌ ப்ரகாச அப்ரகாச ஸத்பாவான்மாமஹும் ந ஜானாமி**

**இத்யாதி அனுபவாச்ச அஞ்யான உபஹிதம் சைதன்யம் ஆத்மேதி**

**வததி। 130**

ப்ரஞ்யானகமாயுள்ளது ஆனன்தமய ஆத்மா என்னும்வாக்யத்தை ஆதாரமாகக் கொண்டும் ஆழ்ந்த தூக்கத்தில் ப்ரஞ்யை இருக்கவும் செய்யும், இல்லாமலும் இருக்கும் அதனாலேயே விழித்தவுடன் எனக்கு எதுவும் தெரியவில்லை'' என்று கூறுவதாலும் அஞ்யானத்தோடு சம்பந்தமுள்ள ப்ரஞ்யானம் ஆத்மா என்பர்.

**சூன்யவாதிகள்**

**அபரோ பௌத்த: ''அஸதேவ இதமக்ர ஆஸீத்''ஈத்யாதி ஸ்ருதே:**

**ஸுஷுப்தௌ ஸர்வ அபாவாதஹம் ஸுஷுப்தௌ ஸ்வ அபாவ**

பராமர்சவிஷயானுபவாச்ச சூன்யமாத்மேதி சூன்யவாதிகள் கூறுவர். அஸத்தே முதலில் இருந்தது என்னும் வேத வாக்யத்தை ஆதாரமாகக் கொண்டும் ஸுஷுப்தியில் எதுவும் தெரியாததாலும், ஸுஷுப்தியில் நான் இல்லை என்று விழித்தவுடன் சொல்லுவதாலும் சூன்யமே ஆத்மா என்பர்.

(தொடரும்)

### மாதா-பிதா விஷயம் : தெய்வத்தின் குரல் (மூன்றாம் பகுதி)

ஆனாலுங்கூட மாதா பிதாக்களை இம்மாதிரி விஷயங்களில் ஒருத்தனால் சாந்தமாக எடுத்துச் சொல்லிக் 'கன்வின்ஸ்' பண்ண முடியவில்லை என்றால் அப்போது அவர்களிடம் சண்டைக்குப் போகப்படாது. அவர்களை மீறியும் செய்யக்கூடாது. சாஸ்த்ரப்படி மாதா பிதா வாக்ய பரிபாலனத்துக்கு அப்புறந்தான் எந்த தர்மமும். அதனால் அவர்கள் தப்பாகச் சொன்னாலும் அவர்களுக்குத் தெளிவு தரவேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்க வேண்டுமே தவிர மீறிச் செய்யக்கூடாது. அதன் பாபமோ புண்யமோ அவர்களைச் சேர்ந்தது என்று விட்டுவிட வேண்டும். இப்போது இந்த நிமிஷம், இந்த மாதா பிதாக்களின் கஷ்டத்தைப் பார்த்ததில் இப்படித்தான் கொஞ்சம் கடுமையாகவே சொல்லத் தோன்றுகிறது.

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா



சகுனி ஸூதாட்டத்திற்கு தர்மரை அழைத்துவர செய்தல் துர்யோதனன் அரசே இந்த சகுனி சூதாட்டத்தில் கை தேர்ந்தவன் சூதாட்டத்தில் தர்மனை வென்று அவனுடைய செல்வங்களை நமதாக்கிக்க நீங்கள் அனுமதி அளியுங்கள்.

த்ருத்ராஷ்ட்ரன் இதைக்கேட்டு விதுரனை அழைத்து வர துர்யோதனுக்கு கட்டளையிட்டான்.

சூதாட்டத்தின் விளைவுகளை அவன் அறிந்திருந்தாலும் பிள்ளை பாசத்தால் அனுமதி அளித்தான்.

இதைக்கேட்ட விதுரர் அரசே இந்த சூதாட்டத்துக்கு நான் ஒப்பேன். உங்கள் புதல்வர்களிடத்தில் பேதத்தை உண்டாக்காமல் இருக்கும் பக்ஷத்தில் நடத்தவும்.

த்ருதராஷ்ட்ரன் சுபமோ அசுபமோ ஹிதமோ ஹிதமில்லையோ நட்புடன் கூடிய சூதாட்டம் நடக்கட்டும். நீ போய் காண்டவ ப்ரஸ்தத்தில் இருக்கும் தர்மனை அழைத்து வா.

கட்டாயப்படுத்தினதின் பேரில் விதுரர் தர்மனை பார்க்கச் சென்றார். அவரைக்கண்ட தர்மர் அரசனின் குசலப்ரஸ்னங்களைச் செய்தார். விதுரர் அரசர் தன் பரிவாரங்களுடனும் புத்ரர்களுடனும் இந்த்ரன்போல் நலமாயிருக்கிறார். அவர் நட்புடன் கூடிய சூதாட்டத்திற்கு உம்மை அழைத்தார்.

அனர்த்தத்தின் மூலம் சூதாட்டம் என்பதை நானறிவேன்.அரசர் சொன்னதால் உம்மை அழைக்கிறேன். இவ்விஷயத்தில் உமக்கு எப்படி செய்யத் தோன்றுகிறதோ அப்படி செய்யுங்கள். கூப்பிட்டபின் போகாமல் இருக்க நான் இசையேன் என்று கூறி தர்மர் தன் பரிவாரங்களுடனும் த்ரௌபதியுடனும் அத்தினாபுரம் சென்றார்.

அத்தினாபுரம் சென்ற தர்மர் அரசரையும் மற்றவர்களையும் அவரவர் தகுதிக்கேற்ப சந்தித்தார். இரவை ஸுகமாய் கழித்தபின் காலைக்கடன்களை முடித்தபின் தர்மர் சூதாடும் சபைக்கு ப்ரவேசம் செய்தார்.

**சகுனி :** தர்மனே இதோ சொக்கட்டான் துணி விரிக்கப்பட்டுள்ளது. பாய்ச்சிகாய்களை உருட்டவும் ஆடவும் தெரியும் என்று எண்ணுகிறேன் என்றான்.

**தர்மர் :** யுத்த வீரமில்லாதது சூதாட்டம். வஞ்சகமும் பாபமும் கூடியது. நானாக ஆடமாட்டேன். ஆனால் கூப்பிட்டால் தட்டமாட்டேன். விதி வலியது. நான் யாருடன் ஆடவேண்டும்?

**துர்யோதனன் :** நான் பலவகைச் செல்வங்களைத் தருகிறேன். எனக்காக சகுனி மாமா ஆடுவார்.

**தர்மர் :** ஒருத்தனுக்காக இன்னொருவர் ஆடுவது அன்யாயமல்லவா.

நீ அப்படி நினைப்பின் சூதாட்டம் தொடங்கட்டும்.

ஆயிரமாயிரம் தங்கக்குடங்கள் ஆயிரமாயிரம் வெள்ளித் தட்டுகள், ரத்ன வைடூர்யங்கள், பசுக்கள், தாசிக்கள், வேலைக்காரர்கள், கஜங்கள், ஆடுகள் இவை என் செல்வங்கள் இவைகளை வைத்து ஆடுவேன்.

இதைக்கேட்ட சகுனி மோசடி செய்து நான் ஜயித்தேன் என்றான்.

**யுதிஷ்ட்ரர் :** இதோ என்னுடைய என் தம்பிகளின் அணிகலங்களை பணயமாக வைக்கின்றேன்.

ஜயம் எனக்கு என்று சகுனி இப்போதும் கூறினான்.

**நகுலனை இழத்தல் :** கபில நிறத்தன், விரிந்த மார்பன் நீண்ட தோளன் பணயம் வைக்கத் தகுதியில்லாதவனுமான நகுலனை பணயம் வைக்கிறேன்.

**சகுனி :** இதோ ஜயம் எனக்கு.

**ஸஹாதேவனை இழத்தல் :** தர்மத்தை உபதேசிப்பவனும் ஞானியாகத் திகழ்பவனுமான ஸஹதேவனை பணயத்திற்கு தகுதி இல்லாதிருப்பினும் பணயம் வைக்கிறேன்.

**சகுனி :** இதோ ஜயம் எனக்கு.

***அர்ஜுனனை இழத்தல் :*** *வீரனும், சூரனும் எங்களை கப்பல்போல் அக்கரைக்கு அழைத்துச் செல்பவனும் பணையத்திற்கு தகாதவனுமான அர்ஜுனனை பணயம் வைக்கிறேன்.*

***சகுனி :*** *இதோ எனக்கு ஜயம்.*

***பீமனை இழத்தல் :*** *கதாயுதத்தில் சிறந்தவனும், எவனைவிட மேலான பலசாலி இல்லையோ, பணயத்திற்கு தகாதவனாயிருப்பினும் பீமனை பணயம் வைக்கிறேன்.*

***சகுனி :*** *இதோ எனக்கு மீண்டும் ஜயம்.*

***சகுனி :*** *தர்மரே எல்லா செல்வங்களையும் இழந்து நிற்கிறாய். இனி எதை வைத்து ஆடுவாய்? தன்னை இழத்தல் இவர்களுக்கு நான் ஜ்யேஷ்டன். அவர்கள் எனக்கு ப்ரியமானவர்கள். ஜயிக்கப்பட்டால் அடிமையாவேன்.*

*(தொடரும்)*

### நிகர விளைவு : தெய்வத்தின் குரல் (மூன்றாம் பகுதி)

*ஆகக்கூடி பலவிதமான ஆசாரச் சீர்திருத்தங்களைப் பற்றிச் சுருக்கமாகப் பார்த்தோமேயானால் பழைய ஒழுக்கத்தையும் காரியங்களையும் எடுத்துவிட்டுப் புதியதை வைத்தால், பழசை மீறிய பழக்கத்தில் புதிசையும் மீறிக் கட்டுப்பாடில்லாமல் போகிறார்கள். இவர்கள் காரியம் என்று பண்ணுவதெல்லாம் ஸ்வயலாபம், 'தான்' என்கிறதை வளர்த்துக்கொள்வது என்பதற்காகத்தான் ஆகிறது. ஆசாரங்கள் கடுமையாக இருக்கிறதென்று இளக்கி, ஃபாஷன் பண்ணினால் பலனும் இளகி ஓடியே விடுகிறது. சித்த சுத்தி ஏறப்பட மாட்டேன் என்கிறது. ''கார்யத்தில் ஒன்றுமில்லை; வேதாந்தா'' என்றால் வெறும் சோம்பேறியாகப் போகிறான்; அப்போது மனஸ் சுத்தமாகாமல் போகிறது என்பது மட்டுமின்றி, இருக்கிற சுத்தமும் போய் அழுக்கைச் சேர்த்துக் கொள்கிறது. ஆசாரமில்லாமலிருக்கிற அநாசாரம்; ஆசாரக் கட்டுப்பாடு போனதால் கண்டதைத் தின்பது, குடிப்பது, கலஹம் செய்வது, இன்னும் மஹாபாபங்களைப் பண்ணுவது என்கிற துராசாரம்; உள்ளொன்றும் புறமொன்றுமாக ஹிபாக்ரிஸி செய்யும் மித்யாசாரம் என்பவைதான் மொத்தத்தில் விருத்தியாகின்றன.*

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

***வினா :*** *- இவ்வாறு யாரேனும் கூறியிருக்கிறார்களா ?*

***விடை :*** *- தாயுமானவர், "துரிதமே அத்துவித ஞானத்தையுண்டுபணு ஞானமாகும்" என்று கூறினார் என்பது முன்னரே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.*

*அன்றியும், அவை யாவும் அநுவாத அர்த்தவாதங்கள். த்வைதத்தைத் தெரிவிப்பதில் அவற்றிற்கு உண்மைக் கருத்து இல்லை. வேற்றுமையானது கண், காது முதலிய பிரத்யக்ஷப் பிரமாணத்தினாலே அறியப்படுவதால், அவற்றை வேதம் அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.*

***வினா :*** *- அநுவாத அர்த்தவாதங்கள் என்றால் என்ன?*

***விடை :*** *- இவற்றை ஒருவகையான புகழ்ச்சி வாக்கியங்கள் என்று கூறலாம். உதாரணமாக, பனிக்காலத்தில் காலைவேளையில் உண்டாகும் குளிரை நெருப்பிலே காய்ந்தால் போக்கிக் கொள்ளலாம். இது யாவருக்கும் தெரிந்ததே. அதை வேதம் ஓரிடத்தில் 'அக்னி குளிருக்கு மருந்து' என்று கூறுகிறது. இம்மாதிரி இதர பிராமணங்களாலே தெரிந்தவற்றை வேதம் பலவிடங்களில் சொல்லுகிறது. இத்தகைய வாக்கியங்களே அநுவாத அர்த்தவாதங்கள் என்று கூறப்படுகின்றன.*

*ஆதலால் முன் சொன்னபடி, 'பிரத்யக்ஷம்' முதலிய சான்றுகளால் தெளிவாகத் தெரிந்தவற்றைத் தெரிவிக்க வேதம் வேண்டியதில்லை. இதர பிரமாணங்களால் அறிய முடியாதவற்றை அறிவிக்கவே வேதம் ஏற்பட்டது.*

***வினா :*** *- இங்கு எது பிரத்யக்ஷம் முதலிய பிரமாணங்களால் அறியக் கூடியது? எது அறிய முடியாதது?*

***விடை :*** *- ஐந்து விதமான த்வைத ஞானங்களும், பிரத்யக்ஷத்தாலோ அல்லது அநுமானத்தாலோ அறியக்கூடியவை.*

***வினா :*** *- அந்த ஐந்துவித த்வைதங்கள் யாவை?*

***விடை :*** *- அவை (1) ஜீவனுக்கும், ஈசனுக்கும் வேறுபாடு (2) ஜீவனுக்கும், ஜடத்துக்கும் வேறுபாடு (3) ஜீவர்களுக்குள் பரஸ்பரம் வேறுபாடு (4) ஜடங்களுக்குள் பரஸ்பரம் வேறுபாடு (5) ஜடத்துக்கும், ஈசனுக்கும் வேறுபாடு என்ற ஐந்தும் ஆகும். இவ்வைந்து பேதஞானங்களே மோக்ஷ சாதனமென்பது த்வைதிகளின் கொள்கை.*

**வினா : -** இந்த ஐந்தும் பிரத்யக்ஷத்தாலோ அல்லது அநுமானத்தாலோ அறியப்படுகின்றனவே, இந்த பிரமாணங்களால் அறியக்கூடாதது எது ?

**விடை : -** ஸர்வபரிபூரணமான பரமாத்மா அத்வைத ஞானம். அது ஒன்றுதான் பிரத்யக்ஷம் முதலியவற்றால் அறிய முடியாதது. ஆதலால், அந்த ஒன்றைத் தெரிவிப்பதற்குத் தான் வேதம் அவசியம் வேண்டியிருக்கிறது. அந்த அத்வைதத்தைத் தெரிவிப்பதாலே தான் வேதம் வேதமாகிறது. அத்வைதம் ஒன்று தான் வேதத்தின் பொருள். அறியக்கூடாதவை அறிவிப்பதே வேதத்தின் கடமை.

**வினா : -** ஒரு நூலிலே த்வைதவாக்கியங்களும், அத்வைத வாக்கியங்களும் இருக்குமானால், அந்த நூலுக்குத் த்வைதத்தைத் தெரிவிப்பதில் தாத்பரியமா? அத்வைதத்தைத் தெரிவிப்பதில் தாத்பரியமா?

**விடை : -** எந்தப் பிரபந்தத்திலேனும், கர்மமார்க்கத்தையும், பக்திமார்க்கத்தையும் அறிவிக்கும் த்வைத வாக்கியங்கள் ஆயிரக்கணக்காக இருப்பினும், அத்வைத வாக்கியம் ஒன்று இருந்து விட்டால், அப்பிரபந்தம் முழுவதும் அத்வைதக் கருத்து கொண்டதே என முடிவு கூறலாம். ஏனெனில், அத்வைத ஸாக்ஷாத்காரத்திற்கு, த்வைத நிலையிலிருந்து செய்ய வேண்டிய கருமமான யோகங்களும், அந்தரங்க சாதனங்களான சமம், தவம் முதலியவையும் அவசியம் அபேக்ஷிக்கப்படுகின்றன.

**வினா : -** “கருமம்” முதலியவற்றால் அத்வைத அறிவு உண்டாகும் என்பதற்கு ஆதாரங்கள் உண்டா?

**விடை : -** “அந்தப் பரம்பொருளை வேதமோதல், ப்ரஹ்ம யஜ்ஞம், தானம், தவம் முதலியவற்றால்......” எனத் தொடங்கும் உபநிஷத்வாக்கியமும், அப்பைய்ய தீக்ஷிதஸ்வாமிகளுடைய

இளம்பிறை யணிந்த ஈசன தருளால்
அத்வைத வாஸனை ஆடவர்க் குண்டாம்,

என்ற பொருள்கொண்ட சுலோகமும், ஸ்ரீ சங்கரபகவத்பாத ஸ்வாமிகளுடைய “வர்ணாச்ரம தர்மத்தோடு கூடிய தவத்தாலும் பகவானுடைய திருவருளைப் பெறுவதாலும், மனிதர்களுக்கு அறிவு ஏற்படும். ” என்ற திருவாக்கும் இதைத் தெரிவிக்கின்றன.

(தொடரும்)

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

பாகம்-2

# ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*31. ஸ்ரீ தீர்த்தர் 'ப்ருந்தாவன மதுனா மன்யே ஸகி ப்ரஹதாரண்யமஹம்' (6வது தரங்கம் கீதம் 52) கண்ணனுடன் சேர்ந்து இருக்கும் ப்ருந்தாவனத்தை 'ப்ரஹதாரண்யகம்' என்ற உபநிஷத்தாகவே கருதுகிறேன் என்றும், பிருந்தாவனம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை உளமாற நேசிப்பவர்களுடைய பலகாலமாகத் தொடர்ந்து வரும் அக்ஞானத்தை அடியோடு அழிக்கக் கூடியது என்றும் ப்ரஹதாரண்யகம் முமுக்ஷுக்கள் பலருக்கு ஜீவபரமாத்மைக்ய ஞானத்தை அளிப்பதன் மூலம் அக்ஞானத்தை அறவே அழிக்கவல்லது என்பது போல் இரண்டிற்கும் உள்ள ஒற்றுமைகளையும், ஒரு தோழி மற்றொரு தோழியிடம் விளக்குவது போல் ஸ்ரீ தீர்த்தர் கூறுவது அவரது சிறந்த வேதாந்த ஞானத்தை பறைசாற்றுகிறது.*

*32. ''நிமிஷமபி யுகஸஹஸ்ர ஸமதயா நீதம் மயா தினமாஸாயம்'' (6வது தரங்கம் கீதம் 58 2வது சரணம்) கண்ணனைப் பார்க்காத க்ஷணநேரம் ஆயிரம் யுகங்களுக்கு ஸமமாகும் என்று கோபிகள் கூறுவதாக ஸ்ரீ தீர்த்தர் அவர்களின் பிரிவாற்றாமையை விளக்கியுள்ளார். பாகவதம் ஸ்க 10 அத்யா 31 ஸ்லோ 15ல் கோபிகா கீதத்தில் 'த்ருடிர்யுகாயதே த்வாம் அபஸ்யதாம்' என்ற வரியை இப்போது நினைவு கூர்வோம்.*

*33. மேலும் ஸ்ரீ தீர்த்தர் 'பூயோ பூயோ யாசேஞ்ஜலினா' என்று தொடங்கும் மிக அருமையான கீதம் 57ல் (தரங்கம் 6) அரை நிமிஷம் கூட கிருஷ்ணனை பார்க்காதிருக்கும் இந்த உடல் வெறுக்கத்தக்கதாகும் என்றும் 'காந்தம் காந்தாரமபி தவ யோகே... காந்தாரம் க்ருஹமபிது வியோகே கருணா தருணீ மயி தவ பவது' என்று கண்ணன் இருக்குமிடமானால் காடும் நாடு போன்ற அழகுள்ளதாகும். கண்ணன் இல்லையேல் வீடானாலும் அது கஷ்டங்கள் நிறைந்த காடாகும் என்று ஸ்வானுபவத்தை கூறும் அழகு கிருஷ்ண பக்தர்களை மிகவும் கவருகிறது. அதிலும் புன்னாகவராளி ராகத்தில் அர்த்தபாவத்துடன் உடையாளூர் அனுபவித்துப் பாடும் போது அதைக் கேட்போர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்கிறது.*

**ராஸக்ரீடை**

*34. 7வது தரங்கத்தில் கோபிகைகள் ஸம்ஸாரத்தில் வெறுப்பு ஏற்பட்டு அதனிடமிருந்து விடுதலையடையவே ஸ்ரீ கிருஷ்ணனிடம் புகலிடம் அடைந்தோம் எனக் கூறியபின் ராஸக்ரீடை விவரிக்கப்படுகிறது. ஆயர்பாடியிலுள்ள மங்கையர் அநேக ஆயிரம்*

பிறவிகளில் செய்த தவத்தால் கோபஸ்த்ரீ என்ற இந்தப் பிறவியில் ஸச்சிதானந்த வடிவான ஸ்ரீ கிருஷ்ணனின் திவ்யதர்ஸனம் பெற்று பிறவியின் பயனை அடைந்தனர் என்று கூறுகிறார் (7வது தரங்கம் ஸ்லோகம் 4).

35. மேலும் 7வது தரங்கம், கீதம் 1ல் 'அத்வயமகண்டிதம்' என்ற சரணத்திலிருந்து 20வது சரணம் வரை 20 சரணங்கள் அடங்கிய கீதத்தால் ஸாமவேதத்தைச் சார்ந்ததும் 16 பிரிவுகள் கொண்டதுமான சாந்தோக்ய உபநிஷத்தில் உத்தாலக ருஷியால் தன் புதல்வனும், சீடனுமான ச்வேதகேது என்ற முனிகுமாரனுக்கு உபதேஸிக்கப்பட்ட ஆத்மதத்வ ஸாரத்தை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ராஸமண்டலத்தில் உள்ள கோபிகைகளுக்கு கானரூபமாக உபதேசித்துள்ளதாக ஸ்ரீ தீர்த்தர் வர்ணித்துள்ளது அவரின் கவித்வத்தையும் உயர்ந்த ஆத்மஞானத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

36. மிகச்சிறந்த தத்வக்ஞானம் பெற்றவர்களுள் இணையற்றவள் என்று ஒரு கோபியைக் குறிப்பதற்காக 'ஹ்ருதயநிஹிதம் காந்தம் காசிதம் களிந்த ஸூதாதடே' என்ற வரியில் காசித் என்ற பதப் ப்ரயோகம் செய்கிறார். கடோபநிஷத்தில் மிகச்சிறந்த அறிவாளி ஆத்மதத்வத்தைக் கண்டாள் என்று கூறுகையில் 'காசித்' பதம் ப்ரயோகிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்தில் ஒருவனே ஆத்ம ஞானத்திற்காக முயற்சி செய்வான். முயற்சிப்பவர்களுள் ஆயிரத்தில் ஒருவனே தத்துவத்தை அறிகின்றான் என்று பகவத்கீதையிலும் 'மனுஷ்யாணம் ஸஹஸ்ரேஷு.... கச்சின்மாம் வேத்தி தத்வத' (அத்.7 ஸ்லோக 3) என்று கூறப்பட்டுள்ளது. இங்கேயும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா காசித் என்ற பதப் ப்ரயோகம் செய்கிறார். கோபியர்கள் அத்தகைய கிடைத்தற்கரிய ஆத்ம தத்வ ஞானத்தை ஸ்ரீ கிருஷ்ணனுடைய அருகாமையில் இருந்த காரணத்தாலேயே கைவரப் பெற்றனர் என்று விளக்கவே ஸ்ரீ தீர்த்தர் காசித் என்ற பதப் ப்ரயோகம் செய்கிறார் (தரங்கம் 7 ஸ்லோ 12)

37. சத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன் சோஷ்னுதே ஸர்வான் காமான் ஸஹ என்று தைத்திரீய உபநிஷத் ஆனந்தவல்லி கூறுகிறது. ஹ்ருதயத்திலிருக்கும் உபநிஷத்ஸாரச் சுருக்கமான, 'புத்தியால் நான் ப்ரஹ்மமாகவே இருக்கிறேன் என்று உணருபவன் பேரானந்தத்தையடைகிறான். பேரானந்தத்தில் மூழ்கித் திளைத்த அந்த ஜீவன் முக்தன். நானே அந்த ப்ரஹ்மம் என்று பாடுகிறான்' என்ற தைத்திரீய உபநிஷத் ப்ருகுவல்லி கூறுகையில் ஹாவ் ஹாவ் ஹாவ் என்று ஆனந்தக் கூத்து ஆடுகிறான் என்றும் கூறுகிறது. இக்கருத்தையே ஸ்ரீ தீர்த்தர் தன்னையே ஒரு கோபிகையாகப் பாவித்து இந்த பரமானந்தத்தை தான் அனுபவித்து அதை கோபியர்கள், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுடன் அனுபவித்ததாக எழுதியுள்ளார். (தரங்கம் 7 ஸ்லோக 12)

(தொடரும்)

# ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள்

ரா ஸ்ரீ

**28. கேள்வி :** வேதாங்கம் என்றால் என்ன **?**

**பதில் :** சிக்ஷா கல்பம், வ்யாகரணம், நிருக்தம், ஜ்யோதிஷம், சந்தஸ் என்பவை வேதங்கங்கள் எனப்படும்.

29. **கேள்வி :** வேதாங்கத்தின் நிலைகள் என்ன ?

**பதில் :** சிக்ஷை மூக்கு கல்பஸூத்ரம் கைகள், வ்யாகரணம் வாய், நிருக்தம் செவி ஜ்யோதிஷம் கண்கள், சந்தஸ் கால்கள்.

30. **கேள்வி :** ஸிக்ஷா என்றால் என்ன ?

**பதில் :** என்னூலில் வேதமந்த்ரங்களின் உச்சரிப்பில் ஏற்றத்தாழ்வு உதாத்தம் அனுதாத்தம் ஸ்வரிதம் போன்றவகளையும் எழுத்துப் பிறப்பதையும் சொல்லப்பட்டுள்ளதோ அது ஸிக்ஷா எனப்படும்.

31. **கேள்வி :** கல்பம் என்றால் என்ன?

**பதில் :** என்னூலில் வேத மந்த்ரங்களின் ரிஷிகள் தேவதைகள் ஆகியவற்றுடன் வேள்விகள் ஸம்ஸ்காரங்கள் அதன் ப்ரயோகங்கள் கூறப்பட்டுள்ளனவோ அதனை கல்பம் என்பர்.

32. **கேள்வி :** வ்யாகரணம் என்பது என்ன?

**பதில் :** ஒரு சொல்லின் உத்பத்தி ஒலி, மொழி நியமம், செயலை செய்யக்கூடிய ஸாத்யக்கூறுகள், ஸாதனைகள் அவற்றை நிரூபிக்கும் நிரூபணங்களும் வ்யாகரணம் எனப்படும்.

33. **கேள்வி :** நிருக்தம் என்றால் என்ன ?

**பதில் :** ஒரு பதத்தை வகுத்தல் அதாவது ஒரு சொல்லின் பொருளைத்தெரிந்து கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறைகளை விவரிக்கும் நூல்.

34. **கேள்வி :** ஜ்யோதிஷம் என்பது என்ன?

**பதில் :** என்னூலில் க்ரகங்களின் அமைப்பு அவைகளின் வழிகள், காலத்தின் கணக்கு இவை வேள்வி செய்வதற்கு விவரிக்கப்படுகிறதோ அன்னூலுக்கு ஜ்யோதிஷம் எனப்படும்.

35. **கேள்வி :** சந்தஸ் எனப்து என்ன?

**பதில் :** எந்த நூலில் லௌகீகமாக வேத பதங்களின் நிலை விவரிக்கப்பட்டுள்ளதோ அது சந்தஸ் எனப்படும். இவை இரண்டு பிரிவாக உள்ளது.

36. **கேள்வி :** உபவேதங்கள் எத்தனை வகை?

**பதில் :** நான்கு வேதங்களுக்கும் நான்கு உபவேதங்கள் உள்ளன. ருக்வேதம் ஆயுர்வேதம், யஜுர்வேதம், உபவேதம், தனுர்வேதம், ஸாமவேதம், உபவேதம், காந்தர்வ வேதம், அதர்வ வேதம், உபவேதம் அர்தசாஸ்த்ரம்.

37. **கேள்வி :** நான்கு வேதங்களின் கோத்ரம் என்னென்ன?

**பதில் :** ருக்வேதம் ஆத்ரேய கோத்ரம், ப்ரம்மா தேவதை, காயத்ரீ சந்தஸ் யஜுர்வேதம் பாரத்வாஜகோத்ரம் ருத்ர தேவதை த்ருஷ்டுப் சந்தஸ் ஸாமவேதம் காஸ்யப கோத்ரம் விஷ்ணு தேவதை ஜகதீ சந்தஸ், அதர்வண வேதம் வைராண கோத்ரம் இந்த்ரன் தேவதை அனுஷ்டுப்.

38 **கேள்வி :** வேதாந்தம் என்பது என்ன?

**பதில் :** வேதத்தின் முடிவுப்பகுதி ப்ரம்ம வித்யையின் நிர்ணயம், உபாஸனை செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய வஸ்து நிர்ணயம் போன்றவற்றை =+விவரிப்பதையே வேதாந்தம் என்பர். -/இதில் ப்ரம்மவித்தை நிரூபணம் செய்யப்படுகிறது.

39. **கேள்வி :** ஸ்ருதி என்பது என்ன?

**பதில் :** யாராலும் இயற்றப்படாததும் குருவின் மூலமாக கேட்கப்படுகிறதோ அதனை ஸ்ருதி என்பர். ஸ்ருதிஸ்து வேதோ விஞ்யேயோ'' ஸ்ருதி என்பது வேதத்தைத் தெரிவிப்பது.

(தொடரும்)